بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

11 ஜமாதியுல் சானி 1441 ஹிஜ்ரி கமரி 06 தப்லீக் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி 06 பிப்ரவரி 2020

## அல்லாஹ்வின் கட்டளை

لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِيْنَ
إِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا مِّنْ أَنْفُسِهِمْ
يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ
وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்களிடையே அவர்களிலிருந்து ஒரு தூதரை அனுப்பி அருள் புரிந்துள்ளான். அவர் அவனது அடையாளங்களை ஓதிக்காட்டுகின்றார். மேலும் அவர்களைத் தூய்மைப் படுத்துகின்றார். அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். (3:165)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## மனிதனால் எதுவரை முடியுமோ கொள்கைகள், ஒழுக்கங்கள், மற்றும் செயல்களை பயன்படுத்தவேண்டும். மனிதன் எதுவரை தனது ஆற்றலை பயன்படுத்துவது இல்லையோ அவன் வளர்ச்சி அடைவதில்லை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### பொருட்களின் தன்மைகளின் பெயரே அறிவு ஆகும்

அறிவு என்பது என்ன? பொருட்களின் தன்மைகளின் பெயர் மட்டுமே ஆகும். கோல்கள், நச்சத்திரங்கள், தாவரங்கள் தாக்கங்களை கொண்டதாக இல்லை என்றால் இறைவனின் அலீம் என்ற பண்பின் மீது மனிதன் நம்பிக்கை கொள்வது கஷ்டமாகியிருக்கும்.

நமது அறிவின் அடிதளம் பொருட்களின் தன்மைகள் ஆகும் இது ஒரு உறுதியான செயல் ஆகும். நாம் இதிலிருந்து ஞானத்தை கற்கவேண்டும் என்பது நோக்கம் ஆகும். அறிவின் பெயர் ஹிக்மத் என்றும் வைக்கப்பட்டுள்ளது. எனவே தான் வமை யுஃதல் ஹிக்மத ஃபகத் ஊதிய கைரன் கசீரா (2:270) எனக் கூறப்பட்டுள்ளது.

### இஃதினஸ் ஸிராதல் முஸ்தகீம மின் நோக்கம்

ஆக இஃதினஸ் ஸிராதல் முஸ்தகீம–வின் நோக்கம் இதுவாகும், இந்த துஆவின் போது முன்அம் அலைஹிம் என்ற அந்த மக்களின் செயல்கள், ஒழுக்கங்கள், கொள்கைகளை பின்பற்ற வேண்டும் . மனிதனால் எதுவரை முடியுமோ கொள்கைகள், ஒழுக்கங்கள், மற்றும் செயல்களை பயன்படுத்தவேண்டும். மனிதன் எதுவரை தனது ஆற்றலை பயன்படுத்துவது இல்லையோ அவன் வளர்ச்சி அடைவதில்லை. அல்லது அதனை உரிய காரணம் மற்றும் நோக்கத்தை விட்டு விலக்கி, அது அதற்காக படைக்கப்படாத வேறு பணிகளை வாங்கினால் அது வளர்ச்சியின் வழிகளில் முன்னேருவது இல்லை. இந்த விசயத்தை நீங்கள் அனுபவத்தில் பார்க்கமுடியும். கண்ணை நாற்பது நாற்கள் மூடி வைத்திருந்தால் அதன் பார்க்கும் திரன் சென்றுவிடும். எனவே இது முக்கிய வேலையாகும், முதலில் ஆற்றல்களை அதன் இயல்பின் வேலைகளில் ஈடுபடுத்துவதால் அது மேலும் அதிகரிக்கும். நமது சுய அனுபவம் என்னவேனில் செயல் ஆற்றல்களை எந்தளவு பயன்படுத்துகிறோமோ அல்லாஹ் அதில் பரகத்தை இறக்குகிறான். முதலில் கொள்கைகளை , ஒழுக்கங்களை, செய்ல்களை சரிசெய்யவேண்டும் என்பது அதன் பொருள் ஆகும். பிறகு இஃதினல் ஸிராதல் முஸ்தகீம என்ற துஆவை வேண்டினால் அதன் விளைவு முழுமையான முறையில் வெளிப்படும்.

### காலம் சென்ற சமுதாயம் எனக்கூறக் காரணம்

குறிப்பாக தெரியவருவதாவது, இந்த காலம் சென்ற சமுதாயம் எவ்வாறான ஒரு காலத்தில் தோன்றியது எனில் அதற்கு அழிவுகள் உறுவாகி இருந்தன. மனிதனின் செயல்கள், தீமைகள் மற்றும் பாவங்களின் பக்கம் ஒரு கல் கீழ்நோக்கி வருவது போன்று இருந்தன. பாவங்கள் அதிகரித்து இருந்ததினால் மரணித்த சமுதாயம் எனக்கூறப்பட்டது. ளஹரல் ஃபஸாது ஃபில் பர்ரி வல்பஹ்ரி (அர்ரூம் : 42 ) என இறைவன் கூறியது போன்றும் மேலும் ஒரு இடத்தில், யுஹ்யில் அர்ள பஃத மவ்திஹா (அர்ரூம் : 20) கூறியது போன்றும் இருந்தது. இந்த அனைத்து வசனங்களை பார்க்கும் போது தெரியவருவதாவது, இந்த இரு வசனத்திலும் இறைவன் இரண்டு வரைபடத்தை காண்பித்துள்ளான். முதலில் கூறியது நமது நபி (ஸல்) அவர்கள் பிறந்து இருந்த அந்த காலம் ஆகும். அப்போதும் உலகின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்தது, நல்லொழுக்கம், செயல்கள் , கொள்கைகள் அனைத்தின் பெயர் மற்றும் அடையாளம் இல்லாமல் போயிருந்ததால் இந்த சமூதாயம் மரணித்ததாக கூறப்பட்டது. ஏனெனில் அப்போதும் மிகப்பெரிய கருணையின் தேவை இருந்தது எனவே தான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மா அர்ஸல்னாக இல்லா ரஹ்மதல் லில் ஆளமீன் எனக்கூறப்பட்டது (21:108)

எந்த மனிதருக்கு பாம்புகள் நிறைந்த பூமியில் நடக்க கட்டளை தரப்படுமோ அவரை பரிதாபத்திற்குரியவர் எனக் கூறப்படும். அதாவது மிகப்பெரிய ஆபத்துகள் மற்றும் கடுமையான ஆக்கினைகள் எதிர்வருது. ஆகவே இது கருணையின் தேவையுடையது என்பதனால் மரணித்த சமுதாயம் எனக்கூறப்பட்டது. மனிதனுக்கு எப்போது கஷ்டமான வேலை தரப்படுகிறதோ அந்த கஷ்டம் கருணையின் தேவை உடையதாகும். தீமையின் அனுபவம் உள்ள, தீய சிந்தனைகளை செயல்படுத்துபவர்களை எதிர்த்து நிற்பது பிறகு உம்மீயாக இருப்பது எவ்வாறு ஹஸ்ரத் அவர்கள் நாம் உம்மீ ஆக உள்ளோம் மேலும் கணக்கு தெரியாது என கூறுகிறார்கள் எனவே உம்மீகளான அவர்கள், ஏமாற்று மற்றும் தீமைகளில் அனுபவமுள்ள, தீய சமுதாயத்தை எதிர் கொள்ளவேண்டியது வந்தது. எனவே மரணித்த சமுதாயம் என இதற்கு பெயர் வைக்கப்பட்டது.

முஸ்லிம்கள் எந்தளவு மகிழ்ச்சிக்குள்ளாக வேண்டும் என்றால் அவர்களை இறைவன் கருணைக்கு தகுதியானவர்களாக கருதினான். ஆரம்பத்தில் போதனையாளர்கள் நபிமார்கள் எந்த நேரத்தில் வந்தனர் எனில் மக்கள் ஏமாற்றை அறியாதவர்களாக இருந்தனர் மேலும் சிலர் தமது சமுகத்திற்கே வந்தனர், ஆனால் இப்போது மக்கள் ஏமாற்று மற்றும் உலக அறிவு, வித்தைகள் மற்றும் தத்துவம் அறிவியலில் கைதேர்ந்தவர்கள், மேலும் நேர்மையாளர்களுக்கு இந்த உலகத்தின் வெளிப்புற கல்வி, பௌதீக அறிவில் இருந்து மேலும் அதன் இடையிலான திட்டங்கள் மற்றும் வாதங்களிலிருந்து மிகக் குறைவாகவே தொடர்பு உள்ளது. ஒரு ஹதீஸில் வருகிறது, ஈஸாவே ! உமக்கு பிறகு ஒரு சமுதாயத்தை நான் உறுவாக்கப் போகிறேன் அவர்கள் அறிவு அற்றவர்களாக, ஞானம் அற்றவர்களாக இருப்பார்கள். அதாவது உம்மீ ஆக இருப்பார்கள். அன்னார் வினவினார்கள் யா ரப்பி கைஃப யஃரிஃபூனக ? அல்லாஹ்வே ! அவர்கள் ஞானம் மற்றும் அறிவு அற்றவர்களாக இருந்தால் உம்மை எவ்வாறு அறிந்துகொள்வார்கள்? அல்லாஹ் கூறுகிறான் நான் எனது ஞானம் மற்றும் அறிவை வழங்குவேன்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 107,108 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**சதகா மற்றும் தான தர்மங்கள் செய்வதிலும், ஏழைகளுக்கு உதவுவதிலும் பரந்த மனப்பான்மையைக் கொண்டிருந்த பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற சஹாபியான ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 27 டிசம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **27 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன். அவர்களைப் பற்றிய மேலும் சில விவரங்களை இப்போது எடுத்துக் கூறுவேன். இரண்டாவது பைஅத்தே அக்பாவின் போது நியமிக்கப்பட்ட 12 கண்காணிப்பாளர்களில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 461 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள். அன்னார் கஸ்ரஜ் கோத்திரத்தின் குடும்பமான பனூ சாயிதாவைச் சார்ந்தவர் ஆவார்கள். மேலும் கஸ்ரஜின் அனைத்து கோத்திரங்களின் தலைவராக அன்னார் விளங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் மிகவும் கண்ணியமிக்க அன்ஸார்களில் ஒருவராக திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு சில சஹாபாக்கள் கிலாஃபத்திற்காக அன்னாரது பெயரையே முன்மொழிந்தார்கள். அதாவது அன்ஸார்களிலிருந்து அன்னாரது பெயர்தான் முன்மொழியப்பட்டது. அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களின் காலகட்டத்தில் வஃபாத் ஆனார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 230)

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா, முன்ஸிர் பின் அம்ர் மற்றும் அபூ தஜானா ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் தமது கோத்திரத்திரமான பனூ சாயிதாவின் சிலைகளை உடைத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 461 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்தபோது பனூ சாயிதாவின் வீடுகளைக் கடந்து சென்றபோது ஹஸ்ரத் சஅத் பின் உபாதா, முன்ஸிர் பின் அம்ர் மற்றும் அபூ தஜானா ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எங்களிடம் வருகை தாருங்கள். எங்களிடம் கண்ணிடம், ஆற்றல், செல்வம் மற்றும் உறுதித்தன்மை இருக்கின்றது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் இதனையும் கூறினார்கள். அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது சமூகத்தைச் சார்ந்தவர்களில் எவருக்கும் என்னை விட அதிகமாக பேரீத்தம் பழத் தோட்டங்களும் அதன் கிணறுகளும் கிடையாது. மேலும் அத்துடன் செல்வமும், ஆற்றலும் மிகுதியாக என்னிடம் உள்ளது என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், இந்த ஒட்டகத்திற்கு வழிவிடுங்கள். இது இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டுள்ளது.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 272.... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது எங்கு சென்றாலும் தனது விருப்பத்திற்கேற்பவே செல்லும் என்று கூறினார்கள். நான் ஏற்கெனவே கூறியதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்காணிப்பாளர்களை நியமித்திருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த வீடுகளில் நான் நபர்கள் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் பரந்த உள்ளத்தை கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். அவர்கள் துலைம், அவர்களது மகனான உபாதா பிறகு அவர்களது மகனான சஅது, பிறகு அவர்களது மகனான கைஸ் ஆகியோர் ஆவர். துலைம் மற்றும் அவரது குடும்பத்தின் வள்ளல்தன்மை தொடர்பாக மிகவும் நல்ல பிரசித்திபெற்ற விஷயங்கள் உள்ளன.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 441 சஅத் பின் உபாதா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா சென்றபோது சஅத் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக ஒரு பெரிய பாத்திரத்தில் கறி மற்றும் ரொட்டித் துண்டுகள், பால் ஆகியவற்றை அனுப்புவார்கள். பெரும்பாலும் பாத்திரங்கள் மாமிசத்தை கொண்டதாகவே இருந்தன. சஅத் அவர்களின் பாத்திரம் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அன்னாரது மனைவிமார்களின் வீடுகளுக்கும் கொண்டு செல்லப்படும். அதாவது இந்த உணவு பல்வேறு மனைவிகளுக்கும் வரும்.

சில அறிவிப்புகள் இவ்வாறும் உள்ளது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது வீடுகளில் உணவே இல்லாத நாட்களும் வந்திருக்கின்றன.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஹிபா... ஹதீஸ் எண் 2567)

தினமும் அன்னார் உணவை அனுப்பாமல் இருந்திக்கலாம். பெரும்பாலும் அனுப்பி இருக்கலாம். அல்லது ஆரம்ப காலத்தில் அனுப்பி இருக்கலாம். அல்லது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது வள்ளத் தன்மையின் காரணமாக ஏழைகளை கருத்தில் கொண்டவாறு சில சமயங்களில் அதனை ஏழைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்திருக்கலாம். விருந்தினர்களுக்கு கொடுத்திக்கலாம். எனவேதான் பெருமானார் (ஸல்) அவர்களது வீட்டில் எதுவும் இல்லாமல் இருந்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினம் இன்னொரு அறிவிப்பும் உள்ளது. ஹஸ்ரத் ஸைது பின் சாபித் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் வீட்டில் தங்கியபோது அன்னாருக்கு எந்த அன்பளிப்பும் வரவில்லை. முதலாவதாக வந்த அன்பளிப்பை நான் அன்னாரிடம் கொண்டு சென்றேன். அந்த பாத்திரத்தில் கோதுமை ரொட்டி மற்றும் கறி மற்றும் பால் இருந்தது. நான் இதனை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன் சமர்ப்பித்தேன். மேலும் அன்னாரிடம், இதனை எனது தாயார் உங்களுக்காக அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறினேன். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ் இதில் பரக்கத் செய்வானாக என்று கூறினார்கள்.

மேலும் அன்னார் தமது சஹாபக்களை அழைத்தார்கள். அவர்களும் இதிலிருந்து உண்டார்கள். அப்போது நான் கதவருகில்தான் சென்றேன்.

அதற்குள் சஅத் பின் உபாதா ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்திருந்தார்கள். அதனை அன்னாரது அடிமை தனது தலையில் வைத்திருந்தார். அது மிகப் பெரியதாக இருந்தது. நான் ஹஸ்ரத் அபூஅய்யூப் அவர்களின் கதவருகில் நின்று கொண்டேன். அதில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்காக நான் அந்த குவளையின் துணியை அகற்றினேன். அதில் எலும்புகளும், மாமிசமும் இருந்தது. அதனை அன்னாரது அடிமை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்.

ஹஸ்ரத் ஸைது கூறுகின்றார்கள்: நாங்கள் பனூ மாலிக் பின் நஜ்ஜாரின் வீடுகளில் தங்கி இருந்தோம். எங்களில் மூன்று அல்லது நான்கு நபர்கள் நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒருவர் மற்றொருவராக உணவைக் எடுத்துக் கொண்டு செல்வோம். நபி (ஸல்) அவர்கள் ஏழு மாதங்கள் வரை ஹஸ்ரத் அய்யூப் அன்ஸாரி அவர்களின் வீட்டில் தங்கினார்கள். இந்த நாட்களில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா, ஹஸ்ரத் அஸது பின் ஸராரா ஆகியோரின் குவளைகள் தினமும் அன்னாரிடம் வந்தன.

இங்கு இதனையும் விளக்கி விடுகின்றேன். அதாவது ஆரம்பத்தில் உணவு தினமும் வந்து கொண்டிருந்தது. ஏழு மாதங்கள் வரை தொடர்ச்சியாக வந்தது. இதற்குப் பிறகும் வந்திருக்கலாம். ஆனால் முதலில் வந்தது போன்று தொடர்ச்சியாக வந்திருக்காது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது தொடர்பாக ஹஸ்ரத் உம்மே அய்யூப் அவர்களிடம், பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களிடத்தில்தான் தங்கினார்கள். எனவே அன்னாருக்கு மிகவும் பிடித்தமான உணவு எனது என்பதை நீங்களே கூறுங்கள் என்று கூறப்பட்டது. அதற்கு அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட உணவை உண்பதற்கு கட்டளையிட்டதாகவோ, மேலும் அது சமைக்கப்பட்டதாகவோ நான் கண்டதில்லை. மேலும் அன்னாருக்கு முன்பாக கொண்டு வரப்பட்ட உணவில் குறை இருப்பதை அன்னார் வெளிப்படுத்தியதாகவோ நான் கண்டதில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: அபூ அய்யூப் அவர்கள் என்னிடம் கூறினார்கள். அதாவது ஒரு நாள் இரவில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் பெருமபானார் (ஸல்) அவர்களுக்காக ஒரு குவளையை அனுப்பினார்கள். அதில் ஒரு வகையான குழம்பு இருந்தது. அன்னார் அதனை அருந்தினார்கள். இதைத்தவிர வேறு ஒருபோதும் அன்னார் முழுமையாக குடித்ததாக நான் கண்டதில்லை. பிறகு நாங்களும் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக இதனையே சமைத்தோம். அதாவது இந்த உணவை கொண்டு வாருங்கள். இதில் இந்த குறை இருக்கிறது என்று அன்னார் ஒருபோதும் கூறியதில்லை. ஆனால் இந்த உணவு அன்னாருக்கு பிடித்திருந்தது. அன்னார் மிகவும் விருப்பத்துடன் இதனை உண்டார்கள். பருகினர்ர்கள். பிறகு சஹாபாக்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது பிடித்தமானது என்பது தெரிந்ததும் அதற்கேற்ப அவர்களும் சமைத்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக கோதுமை மற்றும் கறியினால் தயார் செய்யப்படும் ஒரு பிரசித்திப் பெற்ற உணவை சமைத்து வந்தோம். அது அன்னாருக்கு மிகவும் பிடித்திருந்தது. இரவு சாப்பிடும்போது அன்னாருடன் 5 லிருந்து 16 நபர்கள் வரை உடன் இருப்பார்கள். உணவின் அளவைப் பொறுத்து அவர்களது எண்ணிக்கை இருக்கும்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 275... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 279... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 572 – 2005 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள ஆஸிஃப் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபு அய்யூப் அன்ஸாரி அவர்களின் வீட்டில் தங்கியது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களும் எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வீட்டில் அன்னார் ஏழு மாதங்கள் வரை தங்கி இருந்தார்கள்.

இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்பு என்னவென்றால், ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் வரை அன்னார் தங்கினார்கள். அதாவது எப்போது வரை மஸ்ஜிது நபவியும் அதற்கு அருகிலுள்ள இருப்பிடங்களும் கட்டப்படவில்லையோ அப்போது வரை அன்னார் அந்த இடத்திலேயே தங்கினார்கள். அபூ அய்யூப் அவர்கள் அன்னாருக்காக உணவை அனுப்பி வந்தார்கள்.

பிறகு எஞ்சிய உணவை தாம் உண்பார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் கலப்பற்றத் தன்மையின் காரணமாக எந்த இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் உணவை உண்டிருப்பார்களோ அந்த இடத்தில் விரல்களை வைத்து உண்பார்கள். மற்ற சஹாபாக்களும் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக உணவை அனுப்பி வந்தார்கள். இவர்களில் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் பெயர் வரலாற்றில் குறிப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 268)

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எங்களது வீட்டிற்கு வருகை தாருங்கள் என்று கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள், சஅத் அவர்களுடன் அவர்களது வீட்டிற்குச் சென்றார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் பேரீத்தம் பழம் மற்றும் தில் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வந்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக குவளையில் பாலைக் கொண்டு வந்தார்கள். அதிலிருந்து அன்னார் அருந்தினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 7 பக்கம் 200... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅத் பின் உபாதா அவர்களின் மகனான கைஸ் பின் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களை சந்திப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லா என்று கூறினார்கள். வீட்டிலுள்ளவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறினார்கள்.

கைஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தை சஅத் அவர்கள் தாழ்ந்த குரலில் அதற்கு பதிலளித்தார்கள். எனவே நான் எனது தந்தையிடம், பெருமானார் (ஸல்) அவர்களை உள்ளே வர கூறமாட்டீர்களா? என்று கேட்டேன். அதற்கு சஅத் அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களை நம்மீது அதிகமாக சலாம் சொல்லட்டும் என்று கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறி திரும்பி சென்றார்கள்.

அதாவது அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறியபோது நான் தாழ்ந்த குரலில் சலாம் கூறினேன். மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறுவார்கள். இவ்வாறு நமது வீட்டில் சாந்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறி திரும்பிச் சென்றார்கள். எனவே சஅத் அவர்கள் அன்னாரைத் பின்தொடர்ந்து சென்றவாறு, யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நான் உங்களது சலாத்தை செவியுற்று தாழ்ந்த குரலில் பதில் தந்தேன். ஏனென்றால் தாங்கள் எங்கள் மீது அதிகமாக சலாம் கூற வேண்டும் என்றேன். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சஅத் அவர்களுடன் திரும்பி வந்தார்கள். சஅத் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை குளிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் குளித்தார்கள். பிறகு சஅத் அவர்கள் யமன் நாட்டில் உற்பத்தியாகக்கூடிய மஞ்சை நிற செடி இதிலிருந்து ஆடைகள் தயார் செய்யப்படுகிறது. அதனைக் கொண்டு தயார் செய்யப்பட்ட ஒரு துணியைக் கொடுத்தார்கள். அன்னார் அதனை கட்டினார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கரங்களை உயர்த்தியவாறு, அல்லாஹ்வே! உனது தருதையும், உனது கருணையையும் சஅத் பின் உபாதாவின் சந்ததிகளின் மீது பொழிவாயாக.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 441,442 சஅத் பின் உபாதா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள

தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & உம்தத்துல காரி ஷரஹ் சஹீஹ் புகாரி தொகுதி 2 பக்கம் 222 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது. அதாவது ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களது வீட்டிற்கு உள்ளே வர விரும்பினார்கள். மேலும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் தாழ்ந்த குரலில் வ அலைக்குமுஸ் சலாம் வ ரஹ்மத்துல்லாஹ் என்று பதிலளித்தார்கள். இது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கேட்கவில்லை. எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்று முறை சலாம் கூறினார்கள். சஅத் அவர்களும் மூன்று முறை இவ்வாறே பதிலளித்தார்கள். அது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கேட்கவில்லை.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் அன்னாருக்குப் பின்னாலேயே சென்றவாறு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. தாங்கள் எத்தனை முறை சலாம் கூறினீர்களோ அதனை நான் செவியுற்றேன். மேலும் அதற்கு நான் பதிலளித்தேன். ஆனால் அதன் சப்தத்தை தாங்கள் செவியேற்கவில்லை. நான் உங்களது சாந்தி மற்றும் பரக்கத்தின் துஆக்களை அதிகமாக பெற விரும்பினேன் என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிஷ்மிஷ் கொடுத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அதனை உண்ட பிறகு, உமது உணவை நல்ல மக்கள் உண்டு கொண்டே இருப்பார்களாக. மேலும் உங்கள் மீது வானவர்கள் ரஹ்மத்திற்கான துஆவை செய்து கொண்டே இருப்பார்களாக. மேலும் நோன்பாளிகள் உம்மிடத்தில் இஃப்தாரி செய்வார்களாக என்று துஆ செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்காக துஆ செய்தார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 356,357 முஸ்னத் அனஸ் பின் மாலிக் ஹதீஸ் எண் 12433 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு அஸீர் கூறுகின்றார்கள்: திண்ணைத் தோழர்களில் 80 நபர்களை ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் தம்முடன் சாப்பிடுவதற்காக அழைத்துச் செல்வார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 56 சஅத் பின் உபாதா – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது திண்ணைத் தோழர்களுக்கு பெரும்பான்மையான தினங்களில் முழு நாளும் பட்டினியாகவே இருக்க நேர்ந்துள்ளது. எவ்வாறிருப்பினும் சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டில் அமர்ந்திருந்த இந்த ஏழைகளை கருத்தில் கொண்டு வந்தார்கள். இவர்களில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் மிகவும் அதிகமாக கருத்தில் கொண்டு வந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா வருகை தந்த ஒரு வருடத்திற்குப் பிறகு ஸஃபர் மாதத்தில் மதீனாவிலிருந்து மக்காவிற்கு செல்லும் பகுதியில் ஜஹ்ஃபாவிலிருந்து 23 மைல் தொலைவிலுள்ள அப்வா என்ற இடத்திற்கு அன்னார் சென்றார்கள். இந்த இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஆமினா அவர்களின் கபரும் உள்ளது. அன்னாரது கொடி வெள்ளை நிறத்தில் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களை தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். அல்லது அமீராக நியமித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 5 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்வா போரின் மற்றொரு பெயர் வதான் போர் என்பதாகும். சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் வதான் போர் தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறை என்னவென்றால், சில நேரங்களில் சஹாபாக்களை தம்முடன் அழைத்துச் செல்வார்கள். மேலும் சில நேரங்களில் ஏதாவதொரு சஹாபியின் தலைமையில் படையை அனுப்பி வைப்பார்கள். வரலாற்று ஆசிரியர்கள் இந்த இரண்டு திட்டத்திற்கும் வெவ்வேறு பெயரை வழங்கியுள்ளார்கள். எனவே எந்த திட்டத்தில் பெருமானார் (ஸல்) அவர்களே கலந்து கொண்டார்களோ அதற்கு கஸ்வா என்றும் எதில் அன்னார் கலந்து கொள்ளவில்லையோ அதற்கு சர்யா அல்லது பஅஸ் என்றும் பெயர் வைத்துள்ளனர்.

ஆனால் இதை நினைவில் கொள்ள வேண்டும். கஸ்வா அல்லது சர்யா ஆகிய இரண்டிற்கும் வாளினால் போர் செய்வதற்காகவே வெளியேற வேண்டும் என்பது அவசியம் இல்லை. அதாவது வாளால் ஜிஹாது செய்வதற்காக வெளியேற வேண்டும் என்பது கட்டாயமல்ல. மாறாக, அன்னார் போரின் நிலையில் அன்னார் பங்கு பெற்றிருந்தால் அத்தகைய பயணத்தை கஸ்வா என்று கூறப்படுகிறது.

அது போர் செய்ய வேண்டும் என்பதற்காக குறிப்பாக வெளியேறாமல் இருந்தாலும் சரியே. மேலும் அன்னாரது கட்டளைக்கேற்ப ஏதாவதொரு குழு பயணத்தை மேற்கொண்டிருந்தாலும் சர்யா அல்லது பஅஸ் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். இதன் நோக்கம் போர் செய்ய வேண்டும் என்பதாக இல்லையென்றாலும் சரியே. ஆனால் சிலர் அறியாமையினால் ஒவ்வொரு கஸ்வாவையும், சர்யாவையும் போர் செய்வதற்காகவே சென்றார்கள் என்று கருதி விடுகின்றனர். இது சரியல்ல.

இதனை நான் கூறிவிட்டேன். அதாவது வாளால் செய்யப்படும் போருக்கான அனுமதி ஹிஜ்ரத்தின் இரண்டாவது ஆண்டு சஃபர் மாதத்தில் அருளப்பட்டது. கடந்த குத்பாவில் நான் எடுத்துக் கூறியுள்ளேன். குரைஷியகளின் கொலை செய்யும் எண்ணம் மற்றும் அவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராக முஸ்லிம்களை பாதுகாப்பதற்காக உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவசியமாக இருந்தது. எனவே அன்னார் இந்த மாதத்தில் முஹாஜிரீன்களின் ஒரு குழுவை தம்முடன் அழைத்துக் கொண்டு அல்லாஹ்வின் பெயரை கூறியவாறு மதீனாவிலிருந்து வெளியேறினார்கள். வெளியேறுவதற்கு முன்பாக அன்னார் தமக்கு பின்னால் கஸ்ரஜின் தலைவரான சஅத் பின் உபாதா அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள்.

மேலும் மதினாவிலிருந்து தெற்குப் பகுதி வழியாக மக்கா செல்லும் வழியில் சென்றார்கள். இறுதியில் வதான் என்ற இடத்தை அடைந்தார்கள். இதன் விளக்கத்தை இதற்கு முன்பும் எடுத்துக் கூறி விட்டேன். இந்த பகுதியில் பனூ சம்ராவைச் சேர்ந்தவர்கள் வசித்து வந்தனர். இந்த கோத்திரம் பனூ கனானவின் ஒரு கிளையாகும். இவ்வாறு இந்த மக்கள் குரைஷியகளின் சகோதரராக திகழ்ந்தார்கள். இங்கு வந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ சம்ராவின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஒருமித்த விருப்பத்துடன் இருவருக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. அதன் நிபந்தனைகள் இவ்வாறாகும்.

அதாவது பனூ சம்ராவைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களுடன் நட்பு ரீதியிலான தொடர்வை வைக்க வேண்டும். மேலும் முஸ்லிம்களுக்கு எதிராக எந்த எதிரிக்கும் உதவி செய்யக் கூடாது. பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ சம்ராவைச் சார்ந்தவர்களை முஸ்லிம்களின் உதவிக்காக அழைக்கும்போது அவர்கள் உடனடியாக வர வேண்டும்.

மற்றொரு புறம், முஸ்லிம்கள் தரப்பிலிருந்து இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது. அதாவது அனைத்து முஸ்லிம்களும் பனூ சம்ராவைச் சார்ந்தவர்களுடன் நட்பு ரீதியிலான தொடர்வை வைக்க வேண்டும். தேவைப்படும்போது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

இந்த உடன்படிக்கை முறையாக எழுதப்பட்டது. இரு தரப்பினரும் இதில் கையெழுத்திட்டனர். மேலும் 15 நாட்களுக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றார்கள். கஸ்வா வதானின் மற்றொரு பெயர் கஸ்வா அப்வா ஆகும். ஏனென்றால் வதான் என்ற இடத்திற்கு அருகில்தான் அப்வா என்ற பகுதியும் உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களின் தாயாரின் மரணம் இந்த இடத்தில்தான் நிகழ்ந்தது.

வரலாற்றாசிரியர்கள் எழுதுகின்றனர். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த போரில் பனூ சம்ராவுடன், மக்கத்து குரைஷிகளையும் கருத்தில் கொண்டிருந்தார்கள். இதன் பொருள் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த திட்டம் குரைஷிகளின் அபாயகரமான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதே ஆகும். அதனால் மிகக்கொடிய மற்றும் அபாயகரமான தாக்கம் ஏற்பட இருந்தது.

அதாவது குரைஷிகளின் குழுவினர் முஸ்லிம்களுக்கு எதிராக அரபு கோத்திரங்களில் இத்தகைய நிலைமையை ஏற்படுத்தி இருந்தனர். குரைஷிகள் முஸ்லிம்களுக்கு எதிராக கோத்திரத்தினரிடம் பிரச்சாரம் செய்து வந்தனர். இதன் காரணமாக இந்த நாட்களில் முஸ்லிம்களின் நிலை மிகவும் அபாயகரமானதாக ஆகிக் கொண்டிருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 327,328)

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டது தொடர்பான இரண்டு கருத்துக்கள் காணப்படுகிறது. வாகிதி, மதானி மற்றும் இப்னு கல்பி ஆகியோர் பத்ர் போரில் கலந்து கொண்டதாக கூறுகின்றனர். ஆனால் இப்னு இஸ்ஹாக், இப்னு அக்பா மற்றும் இப்னு சஅத் ஆகியோர் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை என்று கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இதன் ஒரு விளக்கம் தப்காத்துல் குபராவில் இவ்வாறு வந்துள்ளது.

அதாவது ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் புறப்படுவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். மேலும் அன்ஸார்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை புறப்படச் செய்வதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் புறப்படுதவதற்கு முன்பாக அவர்களை நாய் கடித்து விட்டது. எனவே அவர்களால் பத்ர் போரில் கலந்து கொள்ள முடியவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சஅத் கலந்து கொள்ளவில்லை என்றாலும் அவரிடம் அதற்கான ஆர்வம் இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் பொருட் செல்வத்திலிருந்து ஹஸ்ரத் சஅத் அவர்களுக்கும் பங்கை வழங்கினார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் அஹது, அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அல்இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 594 சஅத் பின் உபாதா – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 461 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 377 சஅத் பின் உபாதா – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது பத்ர் போர் நாளன்று அன்ஸார்களின் கொடி ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களிடம் இருந்தது. இது அல்முஸ்தத்ரிக்கில் வந்துள்ள அறிவிப்பாகும்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 282... சஅத் பின் உபாதா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போருக்கு செவ்வதற்கு முன்பு ஹஸ்ரத் சஅத் அவர்கள் அஸப் என்ற பெயருடைய ஒரு வாளை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் இந்த வாளைக் கொண்டே கலந்து கொண்டார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 124 பாப் கஸ்வா பத்ருல் குப்ரா – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஒரு கழுதையையும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 7 பக்கம் 406 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஏழு வாள்கள் இருந்தன. இதன் ஒரு பெயர் ஸாத்துல் புஃஸூல் ஆகும். அதன் நீளத்தின் காரணமாக இந்த பெயர் அதற்கு கொடுக்கப்பட்டிருந்தது. இதனை ஹஸ்ரத் சஅத் அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக வெளியேறிய பிறகு கொடுத்து அனுப்பினார்கள். இந்த வாள் இரும்பால் ஆனதாகும். இதனைத்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ ஷாம் என்ற யூதனிடம் தானியங்களுக்கு பகரமாக அடகு வைத்திருந்தார்கள். தானியம் 30 சாஹ் அளவு கொண்டதாகும். மேலும் ஒரு வருடத்திற்காக கடனாக பெற்றிருந்தார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 7 பக்கம் 368... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி ஹஸ்ரத் அலி அவர்களிடம் இருந்தது. மேலும் அன்ஸார்களின் கொடி ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களிடம் இருந்தது. போர் கடுமையாக நடைபெறும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் கொடியின் கீழ் இருப்பார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 917 முஸ்னத் அப்துல்லாஹ் பின்அப்பாஸ் ஹதீஸ் எண் 3486 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது அன்ஸார்கள் தரப்பிலிருந்தே போர் வலுவாக நடைபெறும். ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் அங்குதான் இருப்பார்கள்.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கம்பிளியால் போர்த்தப்பட்டிருந்த ஒரு கழுதையில் பயணம் செய்தார்கள். அன்னார் உஸாமா பின் ஸைத் அவர்கள் தமக்குப் பின்னால் அமர்த்தினார்கள். ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் உடல்நலம் விசாரிப்பதற்காக சென்று கொண்டிருந்தார்கள். ஏனென்றால் இந்த நாட்களில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் நோயுற்றிருந்தார்கள். அன்னார் பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜ் முஹல்லாவில் இருந்தார்கள்.

இந்த சம்பவம் பத்ர் போர் நடைபெறுவதற்கு முன்புள்ள சம்பவமாகும்.

ஹஸ்ரத் உஸாமா அவர்கள் கூறி வந்தார்கள். அதாவது நாங்கள் சென்றபோது அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் அமர்ந்திருந்த ஒரு சபையை கடந்தோம். இந்த சம்பவத்தின்போது அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் முஸ்லிமாகவில்லை. எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்கள் பயண வாகனத்தில் அமர்ந்தவாறு சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த தூசி அந்த சபையில் விழுந்தது. அவர்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள்.

அப்போது அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் தமது மூக்கை போர்வையினால் போர்த்தியவாறு, தூசியை கிளப்பாதீர்கள் என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள், அவரிடம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். பிறகு கழுதையிலிருந்து இறங்கினார்கள். அன்னார் அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆனை படித்துக் காட்டினார்கள். அதற்கு அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல், நீங்கள் கூறுகின்ற விஷயத்தை விட நல்ல விஷயம் இல்லைதான்.

இது உண்மையென்றால், எங்களது சபைகளுக்கு வந்து எங்களுக்கு துன்பம் தர வேண்டாம். எங்களது சபைக்கு வந்து இவ்விஷயத்தைக் கூற வேண்டிய அவசியம் இல்லை உங்கள் இடத்திற்கே திரும்பிச் செல்லுங்கள். உங்களிடத்தில் எவர் வருவாரோ அவரிடத்தில் எடுத்துக் கூறுங்கள் என்று கூறினார்.

அப்போது அங்கு அப்துல்லாஹ் வின் ரவாஹா அமர்ந்திருந்தார்கள். அவர்கள் முஸ்லிமாகி இருந்தார்கள். அவர்கள் சஹாபி ஆவார்கள். அவர்கள் இதைக் கேட்டதும், இல்லை. யா ரஸூலல்லாஹ்! எங்களது இந்த சபைகளுக்கு வந்து தாங்கள் எங்களுக்கு இதனை படித்துக் காட்டுங்கள். எங்களுக்கு இந்த விஷயம் மிகவும் பிடித்திருக்கிறது என்று கூறினார்கள். எனவே முஸ்லிம்கள், இணை வைப்பவர்கள் மற்றும் யூதர்கள் ஆகியோர் ஒருவர் மற்றவரை ஏசினர். ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுக்கும்

நிலை ஏற்பட்டது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களின் உணர்வை கட்டுப்படுத்தினார்கள். இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது பயண வாகனத்தில் ஏறி சென்றவாறு ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களிடம் சென்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சஅத் அவர்களிடம், அபூ குப்பாப் கூறிய விஷயத்தை நீங்கள் செவியுற்றீர்களா? என்று கேட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் என்னை இவ்வாறெல்லாம் கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் சஅத் அவர்கள், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! தாங்கள் அவர்களை மன்னித்து விடுங்கள். அவர்களிடம் கண்டும் காணாமல் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வேதத்தை அருளிய அந்த இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் அவன் அருளிய உண்மையை இப்போது இங்கு கொண்டு வந்துள்ளான். இந்த நகரத்தைச் சார்ந்தவர்கள், அப்துல்லாஹ் பின் உபை பின் சலூலிற்கு தலைமை கிரீடத்தை அணிவிக்க முடிவெடுத்திருந்தனர்.

ஆனால் அல்லாஹ் தங்களுக்கு வழங்கிய இந்த உண்மையின் காரணமாக அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் அவர் பொறாமையின் நெருப்பில் அழிந்து விட்டார். எனவே அவர் எதை செய்தாரோ, தாங்கள் எதைக் கண்டீர்களோ அதாவது அவர் தலைவராக ஆக வேண்டியதிருந்து. ஆனால் தங்களின் வருகையின் காரணமாக அவரது தலைமை சென்று விட்டது. எனவே அவர் தங்கள் மீது பொறாமை கொள்கின்றார். எனவேதான் இதனை அவர் கூறியுள்ளார் என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை மன்னித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும், அன்னாரது சஹாபாக்களும் இணை வைப்பவர்கள் மற்றும் வேதத்தை உடையவர்களுடன் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப மன்னித்தே வந்தார்கள். மேலும் அவர்களது துன்பத்திற்கு பதிலாக பொறுமையை மேற்கொண்டு வந்தார்கள்.

எனவே அல்லாஹ் கூறினான்: நீங்கள் உங்கள் செல்வங்கள், உங்கள் உயிர்கள் ஆகியவற்றால் கட்டாயம் சோதிக்கப்படுவீர்கள். மேலும் உங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப் பெற்றவர்களிடமிருந்தும், இணை வைப்பவர்களிடமிருந்தும் துயரம் தரக்கூடியவற்றை நிச்சயமாக நீங்கள் கேட்பீர்கள். நீங்கள் பொறுமையுடன் இறையச்சத்தை மேற்கொள்வீர்களாயின் நிச்சயமாக இது துணிவுக்குரிய செயல்களைச் சேர்ந்ததாகும். (3:187)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: வேதம் வழங்கப் பெற்றவர்களுள் பெரும்பாலார், தங்களுக்கு உண்மை தெளிவாகத் தெரிந்த பின்னர் தங்களிடமுள்ள பொறாமையினால், நீங்கள் நம்பிக்கை கொண்ட பிறகு உங்களை மீண்டும் நிராகரிப்பவர்களாக மாற்ற விரும்புகின்றனர். எனவே அல்லாஹ் தனது கட்டளையை இறக்கும் வரை நீங்கள் (அவர்களை) மன்னித்து கண்டும் காணாதது போன்று நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் முழு ஆற்றல் பெற்றவன். (2:110)

எனவே அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய கட்டளைக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் மன்னிப்பதையே சரியானதாக கருதி வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் மைதனாத்தில் காஃபிர்களுடன் போர் செய்த அந்த நேரத்தில் அல்லாஹ் அன்னாருக்கு அனுமதி வழங்கினான். மேலும் அல்லாஹ் இந்த போரில் குரைஷிகளின் பெரும் பெரும் தலைவர்களை கொன்றான்.

எனவே அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் மற்றும் அவருடன் இருநத இணை வைப்பவர்கள், சிலை வணங்கிகள் ஆகியோர் நிராகரிப்பாளர்களின் தோல்வியைக் கண்டதும் இப்போது இந்த அமைப்பு சிறப்பானதாக ஆகிவிட்டது என்று கூறினர். எனவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தில் நிலைத்திருப்பதாக பைஅத் செய்தார். மேலும் முஸ்லிமாக ஆனார்.

(சஹீஹுல் புகாரி கிதாபுத் தஃப்ஸீர் ஆலி இம்ரான் ஹதீஸ் எண் 4566)

பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் ஆலோசனை பெற்றார்கள். அப்போது அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் வழங்கிய ஒரு அறிவுரை அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அபூ சுஃப்யான் வருவது தொடர்பான செய்தி கிடைத்ததும் அன்னார் ஆலோசனை செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் பேசினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். இதனையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டுகொள்ளவில்லை. பிறகு ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எங்களிடம் ஆலோசனை கேட்கின்றீர்கள். எனது உயிர் எந்த இறைவனின் கையில் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! எங்கள் நீங்கள் கடலில் குதிரையை ஓட்டிச் செல்ல கட்டளையிட்டாலும் நாங்கள் அதனை செய்வோம் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களை அழைத்துக் கொண்டு பத்ர் மைதானத்தை சென்றடைந்தார்கள். அன்னார் தமது தோழர்களுடன் பத்ர் மைதானத்தை அடைந்தார்கள். அங்கு குரைஷிகளின் தண்ணீர் எடுப்பவர்கள் வந்தனர். அவர்களில் பனூ ஹிஜாபின் ஒரு கருப்பர் இருந்தார். அவரை முஸ்லிம்கள் பிடித்துக் கொண்டனர். பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் அபூ சுஃப்யான் மற்றும் அவருடன் வந்திருப்பவர்கள் தொடர்பாக கேட்டனர். ஏனென்றால் அபூ சுஃப்யான் ஒரு மிகப்பெரும் படையுடன் அல்லது கூட்டத்துடன் வந்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்திருந்தது.

எவ்வாறிருப்பினும் அவர்கள் அபூ சுஃப்யானைப் பற்றி கேட்டுக் கொண்டே இருந்தனர். அதற்கு அவன், அபூ சுஃப்யானைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அபூ ஜஹில், உத்பா மற்றும் ஷேபா, மற்றும் உமைய்யா பின் ஹல்ஃப் ஆகியோர் இங்கு அமர்ந்துள்ளனர் என்று கூறினான். அவன் இதை கூறியதும் அவனை முஸ்லிம்கள் அடித்தனர். அதற்கு அவன், அபூ சுஃப்யானும் அதில் இருக்கின்றார் என்று கூறினான். முஸ்லிம்கள் அவனை விட்டு விட்டதும் அவனிடம் கேட்கும்போது, அபூ சுஃப்யானைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அபூஜஹில், உத்பா, ஷேபா மற்றும் உமைய்யா பின் ஹல்ஃப் ஆகியோர் இருக்கின்றனர் என்று கூறுவான். இவ்வாறு அவன் கூறியதும் முஸ்லிம்கள் அவனை அடித்தனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நேரத்தில் நின்று கொண்டு தொழுது கொண்டிருந்தார்கள். பிறகு சலாம் கொடுத்தார்கள். பிறகு கூறினார்கள்: எனது உயிர் எவனது கையில் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! அவன் உண்மையைக் கூறினால் நீங்கள் அவனை அடிக்கின்றீர்கள். அவன் பொய்யுரைக்கும்போது நீங்கள் அவனை விட்டு விடுகின்றீர்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த சிறுவன் சரியானதையே கூறுகின்றான்.

மேலும் அன்னார் கூறினார்கள்: இது இன்ன நபர் விழக்கூடிய இடமாகும். அதாவது எதிரியின் பெயரைக் கூறி இது இந்த நபர் விழக்கூடிய இடமாகும் என்று அன்னார் கூறினார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: அன்னார் தமது கரத்தை பூமியில் வைத்தார்கள். அதே இடத்தில்தான் எதிரிகள் மரணித்து விழுந்தார்கள். அந்த இடத்தை விட்டு இங்கும் அங்கும் விழவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் எங்கு தமது கைகளை வைத்து அடையாளமிட்டார்களோ அங்குதான் அவர்கள் மரணித்து விழுந்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஜிஹாத்.... கஸ்வா பத்ர் ஹதீஸ் எண் 1779)

உஹது போருக்கு முன்பாக ஒரு ஜுமுஆவின் நாளின் மாலைப்பொழுதில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ், ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா ஆகியோர் மஸ்ஜிது நபவியில் ஆயுதங்களை அணிந்தவாறு பெருமானார் (ஸல்) அவர்களின் கதவருகே காலைப்பொழுது வரை பாதுகாப்பு வழங்கினார்கள். உஹது போருக்காக பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேறியபோது அன்னார் தமது குதிரையில் பயணம் செய்தார்கள். மேலும் அம்மை தமது தோழில் வைத்தார்கள். மேலும் வாளை தமது

கையில் வைத்திருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா ஆகியோர் அன்னாருக்கு முன்பாக ஓடினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் போர்க் கவசனங்களை அணிந்திருந்தனர். மற்றவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது வலது புறமும், இடது புறமும் இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 2 பக்கம் 28–30 கஸ்வா உஹது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் உஹது போரின் நிலைமையைப் பற்றி எடுத்துக் கூறியவாறு எழுதுகின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் ஒரு பெரும் படையுடன் அஸர் தொழுகைக்குப் பிறகு மதீனாவிலிருந்து வெளியேறினார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களான சஅத் பின் மஆஸ் மற்றும் சஅத் பின் உபாதா ஆகியோர் அன்னாரது பயண வாகனத்திற்கு முன்பாக மெதுமெதுவாக ஓடி வந்தார்கள். மற்ற சஹாபாக்கள் வலது புறமும், இடது புறமும் மற்றும் பின் புறமும் நடந்து வந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 486)

உஹது போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்களுடன் நிலைத்து நின்ற சஹாபாக்களில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களும் ஆவார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 197... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போரிலிருந்து மதீனா திரும்பி வந்ததும் தமது குதிரையிலிருந்து இறங்கியபோது ஹஸ்ரத் சஅத் பின் மஆஹ் மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா ஆகியோரின் உதவியுடன் தமது வீட்டிற்குச் சென்றார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 229 கஸ்வா உஹது... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

காயங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையில் அன்னார் இறங்கியபோது இந்த இருவரது உதவியை அன்னார் பெற்றார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹம்ரவுல் அஸது போரில் எனது வழிப்பாதையின் உணவாக பேரீத்தம் பழம் இருந்தது. ஹம்ரவுல் அஸத் போர் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் நடைபெற்றது. உஹது போரிலிருந்து திரும்பியபோது குரைஷிகள் ரவ்ஹா என்ற இடத்தில் தங்கினார்கள். ரவ்ஹா மதீனாவிலிருந்து 36 மைல் தொலைவிலுள்ள ஒரு பகுதியாகும். இந்த இடத்தில் குரைஷிகளுக்கு இந்த எண்ணம் ஏற்பட்டது.

அதாவது முஸ்லிம்களுக்கு இழப்பு அதிகமாக ஏற்பட்டுள்ளது. எனவே திரும்பிச் சென்று மதீனாவின் மீது திடீர் தாக்குதல் நடத்த வேண்டும். மேலும் முஸ்லிம்களால் எதிர்கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கருதினர்.

ஒருபுறம் பெருமானார் (ஸல்) அவர்கள் குரைஷிகளை பின்தொடர்ந்து சென்றவாறு ஹம்ரவுல் அஸதை அடைந்தார்கள். மேலும் அன்னாருக்கு குரைஷிகளின் எண்ணம் பற்றியும் தெரிய வந்தது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை பின்தொடர்ந்து செல்லுமாறு கூறினார்கள். ஹம்ரவுல் அஸதிலிருந்து 8 மைல் தொலைவில் துல்ஹலீஃபா என்ற இடம் உள்ளது. அங்கு பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த செய்தி குரைஷி படையினருக்கு தெரிய வந்ததும் அவர்கள் மக்காவை நோக்கி ஓடினர். முஸ்லிம்கள் தமது பலவீனத்தின் நிலையிலும் நம்மீது தாக்குதல் தொடுக்க வருகின்றனர் என்பதை பார்த்த அவர்கள் ஓடினர்.

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் 30 ஒட்டங்களையும், பேரீத்தம் பழங்களையும் கொண்டு வந்தார்கள். அறிவிப்பாளர் எழுதுகின்றார். அவர்கள் ஒட்டகத்தையும் கொண்டு வந்திருந்தார்கள். அதனை சில நாட்களில் இரண்டு என்றும் சில நாட்களில் மூன்று என்றும் அறுக்கப்பட்டது.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 310 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஷரஹ் ஸர்கானீ தொகுதி 2 பக்கம் 464.. – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 354)

மேலும் அவர்கள் அதனை உண்டனர்.

பனூ நஸீர் போர் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் நடைபெற்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களின் பனூ நஸீர் கோத்திரத்தின் கோட்டைகளை 15 நாட்கள் வரை சிறை பிடித்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கைபரைப் போன்று நாடு கடத்தினார்கள். இந்த சந்தர்ப்பத்தில் பொருட் செல்வம் கிடைத்தது. அப்போது அன்னார் ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் அவர்களை அழைத்து கூறினார்கள்: உங்களது சமுதாயத்தை என்னிடம் அழையுங்கள்.

எனவே ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! கஸ்ரஜ் கோத்திரத்தினரையா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை. அனைத்து அன்ஸார்களையும் அழையுங்கள் என்று கூறினார்கள். எனவேதே அவர்கள் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் அனைத்து அன்ஸார்களையும் அழைத்தார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லஹ்வை புகழ்ந்தார்கள். அவனே புகழ்வதற்கு தகுதியானவன் ஆவான். பிறகு அன்ஸார்கள் முஹாஜிரீன்களுக்கு எவ்வாறொல்லாம் பேருபகாரம் செய்தார்கள் என்பது பற்றி எடுத்துக் கூறினார்கள். அதாவது நீங்கள் முஹாஜிரீன்களை உங்களது வீடுகளில் தங்க வைத்தீர்கள். உங்களது உணர்வை விட முஹாஜிரீன்களுக்கு முக்கியத்துவம் வழங்கினீர்கள் என்று கூறினார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் விரும்பினால் நான் பனூ நஸீரிடமிருந்து பெற்ற பொருட் செல்வத்தில் பாதியை உங்களுக்கும் முஹாஜிரீன்களுக்கும் சமமாக பங்கிட்டு கொடுத்து விடுவேன். இந்த செல்வம் நிராகரிப்பவர்களுடன் எவ்வித போரும் நடைபெறாத நிலையில் முஸ்லிம்களுக்கு கிடைத்திருந்தது.

மேலும் அன்னார் கூறினார்கள்: இந்த நிலைமையில் முஹாஜிரீன்கள் உங்களது வீடுகளிலேயே தங்குவார்கள். மேலும் நீங்கள் விரும்பினால், இந்த செல்வத்தை முஹாஜிரீன்களுக்கு நான் பங்கிட்டு கொடுப்பேன். அதாவது சரிசமமாக பங்கிட்டு கொடுத்தால் சரிதான். அதாவது எவ்வாறு முன்பு நீங்கள் நல்ல முறையில் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டீர்களோ அவ்வாறே முஹாஜிரீன்களிடம் நடந்து கொள்ள வேண்டும். உங்களது சகோதரத்துவம் நிலைபெற்றிரும்.

ஆனால் நீங்கள் விரும்பினால் இந்த செல்வத்தை முஹாஜிரீன்களுக்கே பங்கிட்டு கொடுத்தால் பிறகு இதன் விளைவாக அவர்கள் உங்களது வீடுகளிலிருந்து வெளியேறி விடுவார்கள். அனைத்து செல்வமும் அவர்களுக்கு கிடைக்கும். ஆனால் அவர்கள் உங்களது வீடுகளிலிருந்து வெளியேறி விடுவார்கள். முன்பு இருந்ததுபோன்று எவ்வித உரிமையும் இருக்காது என்று கூறினார்கள்.

இதற்கு ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் ஆகிய இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! தாங்கள் இந்த செல்வத்தை முஹாஜிரீன்களுக்கே பங்கிட்டு கொடுத்து விடுங்கள். அவர்கள் எங்களது வீடுகளில் முன்பு இருந்தது போன்றே இருப்பர். எங்களுக்கு எந்தத் தேவையும் இல்லை. தாங்கள் இந்த அனைத்து செல்வத்தையும் முஹாஜிரீன்களிடம் பங்கிட்டு கொடுத்து விடுங்கள். அன்ஸார்களுக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்களுக்கு உரிமையை, முஹாஜிரீன் மற்றும் அன்ஸார்களுக்குரிய சகோதரத்துவத்தின் உரிமையை, எங்களது வீடுகளுக்கு வந்து செல்லக்கூடிய அந்த உரிமை முன்பு இருந்தது போன்று இப்போதும் நிலைத்திருக்கும் என்று கூறினார்கள்.

எனவே அனைத்து அன்ஸார்களும உரத்த குரலில், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நாங்கள் திருப்தி கொள்கின்றோம். மேலும் நாங்கள்

தலை வணங்குகின்றோம் என்று கூறினர். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வே! அன்ஸார்கள் மீதும், அன்ஸார்களின் பிள்ளைகள் மீது கருணை காட்டுவாயாக என்று துஆ செய்தார்கள்.

அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழங்கிய அந்த பொருட்செல்வத்தை அன்னார் முஹாஜிரீன்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தார்கள். மேலும் அன்ஸாரைச் சார்ந்த இரண்டு சஹாபாக்களைத் தவிர வேறு எவருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. அவ்விருவரும் தேவையுடையவர்களாக இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப மற்றும் ஹஸ்ரத் அபூ தஜானா ஆவர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு அபூ ஹகிகின் வாளைக் கொடுத்தார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 325 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அம்தத்துல் காரி ஷரஹ் சஹீஹ் புகாரி தொகுதி 12 பக்கம் 204... – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஹம்ஸா பின்த் மஸ்ஊத் ஒரு பெண் சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தவ்மிய்யத்துல் ஜன்தல் போருக்காக சென்றிருந்தபோது நிகழ்ந்ததுட. இந்த போர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் சஅத் அவர்கள் இந்தப் போரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

சயீது பின் முஸய்யப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் தாயார் மரணமடைந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வெளியே இருந்தார்கள். சஅர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், எனது தாயார் மரணமடைந்து விட்டார்கள். எனவே அவர்களது ஜனாஸா தொழுகையை தாங்கள் தொழ வைக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

அவரது தாயார் மரணமடைந்து ஒரு மாதம் கழிந்திருந்தது. ஒரு மாதத்திற்குப் பிறகே அவர்களுக்கு இது பற்றி செய்தி வந்தடைந்தது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சஅத் பின் உபாதா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு காணிக்கை தொடர்பாக கேட்டார்கள். அது அவர்களது தாயார் செய்ததாகும். அவர்கள் அதனை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே மரணமடைந்து விட்டார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் அவர்கள் சார்பாக அதை நிறைவேற்றுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சயீத் பின் முஸய்யப் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, எனது தாயார் மரணமடைந்து விட்டார்கள். அவர்கள் வஸிய்யத் செய்யவில்லை. எனவே நான் அவர்கள் சார்பாக சதகா செய்தால் அது அவர்களுக்கு பயனளிக்குமா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். எனவே அவர்கள் எத்தகைய சதகா மிகச் சிறந்தது? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், தண்ணீர் கொடுங்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 461,462 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதிலிருந்து அப்போது தண்ணீர் பற்றாக்குறை இருந்தது தெரிய வருகிறது. எவ்வாறிருப்பினும் இன்னொரு அறிவிப்பில் வருகிறது. அதாவது ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஒரு கிணற்றை தோண்டச் செய்தார்கள். மேலும் இது உம்மே சஅத் சார்பாகும் என்று கூறினார்கள். அதாவது அவர்களது பெயரில் அதனை தொடரச் செய்தார்கள்.

அல்லாமா அபூ தய்யுப் ஷம்சுல் ஹக் அவர்கள் அபூதாவூதின் விளக்க உரையில் எழுதுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் மிகச்சிறந்த சதகா தண்ணீர் ஆகும் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் தண்ணீர் விளம்புங்கள் என்று கூறினார்கள். இதன் காரணம் என்னவென்றால், அன்றைய நாட்களில் தண்ணீர் பற்றாக்குறை இருந்தது. அல்லது மற்ற அனைத்தையும் விட தண்ணீரின் தேவை மிகவும் அதிகமாக தேவைப்படுகிறது.

அவர்கள் எழுதுகின்றார்கள்: தண்ணீரை சதகாவாக கொடுப்பதை அன்னார் இதனால்தான் மிகச்சிறந்ததாக ஆக்கினார்கள். ஏனென்றால், இது மார்க்க மற்றும் உலக விவகாரங்களுக்கு மிகச்சிறந்த நன்மையை பயக்கக்கூடிய ஒன்றாகும். குறிப்பாக இந்த நாடுகளில்.

எனவேதான் அல்லாஹ் இந்த வசனத்தில் இந்த அருட்கொடை தொடர்பாக, வ அன்ஸல்னா மினஸ் ஸமாயி மாஅன் தஹூரா அதாவது நாம் வானத்திலிருந்து தூய்மையான தண்ணீரை இறக்கினோம் என்று கூறுகின்றான்.

மதீனாவில் தண்ணீர் மிகவும் சிறந்ததாக விளங்கியது. வெயிலின் காரணமாகவும், தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாகவும் தண்ணீரை மிகவும் விலைமதிப்புமிக்கதாக கருதப்பட்டு வந்தது.

(அவ்னுல் மஃபூத் சுனன் அபீதாவூது தொகுதி 3 பக்கம் 65,66 கிதாபுஸ் ஸக்காத்... – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்றும் கூட கருதப்படுகிறது. அரசாங்கங்களும் கூட இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. எவ்வாறிருப்பினும், இது மட்டுமில்லாமல் அன்னார் தண்ணீர் கிணறை தோண்டச் செய்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா பனூ சாயிதாவைச் சார்ந்தவர் ஆவார்கள். அவர்களது தாயார் மரணமடைந்தபோது அவர்கள் அங்கு இருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, யா ரஸூலல்லாஹ் (ஸல்)! எனது தாயார் மரணமடைந்து விட்டார்கள். அப்போது நான் அவர்களுடன் இருக்கவில்லை. அல்லது வந்த பிறகு எனக்கு தெரிய வந்தது என்று கூறினார்கள்.

முதலில் நான் பயணத்தில் இருந்தார்கள் என்று கூறினேன். அவர்கள் பயணத்தில் இருக்கும்போது தெரிய வந்ததோ அல்லது அதற்குப் பிறகு தெரிய வந்ததோ எவ்வாறிருப்பினும் அவர்களது தாயாரின் மரணத்தின்போது அவர்கள் அங்கு இருக்கவில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நான் அவர்களுக்காக சதகா கொடுப்பது அவர்களுக்கு நன்மை பயக்குமா? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். எனவே நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நான் உங்களை சாட்சியாக ஆக்குகின்றேன். எனது மஹ்ராஃப் என்ற தோட்டத்தை நான் அவர்களுக்காக சதகாவாக வழங்குகின்றேன் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் வஸாயா... ஹதீஸ் எண் 2762)

சதகா மற்றும் தான தர்மங்கள் செய்வது மற்றும் ஏழைகளுக்கு உதவி செய்வது ஆகியவற்றில் அன்னார் பரந்த உள்ளத்தை கொண்டிருந்தார்கள். இவர்களது குறிப்பு இன்னும் உள்ளது. இன்ஷா அல்லாஹ் பிறகு எடுத்துக் கூறுவேன்.

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)**

**தொலைபேசி எண்:**

***1800 103 2131***

**இந்த TOLL FREE எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.**

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:– www.alislam.org

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பு**

**அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் வக்ஃபே ஜதீதில் உலகலாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு 96 லட்சத்தி 43 ஆயிரம் பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 03 ஜனவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற தமது கருத்துச் செறிவுள்ள நூலில், இறைவனை அடைவது, அவனை அடையாளங்கண்டு கொள்வது, அவன் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துவது தொடர்பாக எட்டு வழிமுறைகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்த வழிமுறைகள் மனித பிறப்பின் நோக்கத்தை பூர்த்தி செய்யக்கூடியதும் ஆகும். இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள வழிமுறைகளில் ஒரு மேற்கோளை எடுத்துரைப்பேன். அதனை ஐந்தாவது வழிமுறையாக அன்னார் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையான நோக்கத்தை அடைவதற்கு ஐந்தாவது வழிமுறையாக இறைவன் முயற்சியை வைத்துள்ளான். அதாவது தனது செல்வத்தை இறைவனது வழியில் செலவு செய்வதன் மூலமாகவும், தனது ஆற்றல்களை இறைவனது வழியில் செலவு செய்வதன் மூலமாகவும், மேலும் தனது உயிரை இறைவனது வழியில் செலவு செய்வதன் மூலமாகவும், தனது அறிவை இறைவனது வழியில் செலவு செய்வதன் மூலமாகவும் அவனை தேட வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: தனது செல்வம், தனது உயிர், தனது நஃப்ஸ் மற்றும் அதன் அனைத்து ஆற்றல்களையும் இறைவனது வழியில் செலவு பயன்படுத்துங்கள். மேலும் நாம் எந்த அறிவு, ஞானம் மற்றும் புத்திக்கூர்மை மற்றும் ஆற்றலை வழங்கியுள்ளோமோ அதனை இறைவனது வழியில் பயன்படுத்துங்கள். மேலும் எவர்கள் எனது வழியில் எல்லா வழிகளின் மூலமாகவும் முயற்சி செய்வார்களோ அவர்களுக்கு நாம் எமது வழியை காட்டுகின்றோம்.

**(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 418,419)**

பிறகு இறைவனது அன்பை பெறுவது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

செல்வத்தின் மீது அன்பு கொள்வதும், இறைவனின் மீதும் அன்பு கொள்வதும் உங்களுக்கு சாத்திமல்ல. ஒன்றின் மீதுதான் அன்பு கொள்ள முடியும். எனவே இறைவன் மீது அன்பு கொள்கின்றவரே நற்பேறு பெற்ற நபர் ஆவார். உங்களில் எவராவது இறைவன் மீது அன்பு செலுத்தி அவனது வழியில் செலவு செய்வாரேயானால், அவரது செல்வத்தில் மற்றவர்களை விட அதிக பரக்கத் வழங்கப்படும் என்று நான் நம்புகின்றேன். ஏனென்றால் செல்வம் தானாகவே வருவதில்லை. மாறாக அவனது நாட்டத்திற்கேற்பவே வருகிறது.

ஆக எவர் இறைவனுக்காக செல்வத்திலிருந்து சிலவற்றை எடுத்து வைப்பாரோ அவர் அதனை நிச்சயமாக பெறுவார். மேலும் எவர் செல்வத்தின் மீது அன்பு செலுத்தி இறைவனது வழியில் தொண்டு செய்யும் அளவிற்கு தொண்டு செய்யவில்லை என்றால் பிறகு நிச்சயமாக அவர் அந்த செல்வத்தை இழப்பார்.

**(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 497)**

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபரும், நான் இவ்வளவு சந்தா செலுத்துவேன் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். எவர் அல்லாஹ்விற்காக உறுதிமொழி எடுத்துக் கொள்வாரோ அல்லாஹ் அவரது ரிஸ்கில் அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றான். **(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 41)**

ஆக எவர்களுக்கு இதுபற்றிய அறிவு இருப்பதில்லையோ, புதிதாக வரக்கூடியவர்கள் கவனமற்றவர்களாக இருந்து விடுகின்றனர். அல்லது கவனமற்றவர்களாக இல்லையென்றாலும் அவர்களுக்கு சில நேரங்களில் பொருள் தியாகத்திற்கான உணர்வு இருப்பதில்லை. இத்தகையவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். அதாவது நீங்கள் உண்மையான தொடர்பை வைத்துள்ளீர்கள் என்றால் பிறகு நான் இவ்வளவு சந்தாவை கண்டிப்பாள செலுத்துவேன் என்று உறுதியான உறுதிமொழி எடுக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் லட்சக்கணக்கான கலப்பற்றவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு சந்தாவின் முக்கியத்துவம் தொடர்பாக கவனமூட்டப்பட்டால் பிறகு அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக அவர்கள் பொருள் தியாகத்தில் முன்னேறுவதற்காக முயற்சி செய்கின்றனர்.

இதன் காரணமாகத்தான் நான் கடந்த பல ஆண்டுகளாக ஜமாஅத் அமைப்பிடம், புதிதாக வரக்கூடியவர்களையும் பொருளாதார அமைப்பில் கண்டிப்பாக இணைக்க வேண்டும் என்று கவனமூட்டி வருகின்றேன். ஒருவர் ஒரு ரூபாயை கொடுப்பதற்கு ஆற்றல் பெற்றவராக இருந்தாலும் அவர் தனது சக்திக்கேற்ப வழங்க வேண்டும்.

சில இடங்களில் இதனையும் பார்க்க முடிகிறது. அதாவது பொருளாதார வசதி படைத்தவர்கள் ஆப்ரிக்கா போன்ற சில ஏழை நாடுகளில் இவ்வாறு கூறி விடுகின்றனர். மேலும் சில முறை இங்குள்ள சிலரும் தனது ஏழை உறவினர்கள் சார்பாக சந்தாவை செலுத்து விடுகின்றனர். அதாவது இந்த ஏழைகள் சார்பாக நாங்கள் சந்தாவை செலுத்து விடுகின்றோம் என்று கூறுகின்றனர். இது ஒரு நன்மைதான். ஆனால் ஆனால் அந்த ஏழை மக்களும் அவர்களின் சக்திக்குட்பட்டவாறு சந்தா அமைப்பில் பங்கெடுக்க வேண்டும். செல்வத்தை மட்டும் ஒன்று சேர்ப்பது நமது நோக்கமல்ல. மாறாக, இறைவன் மீதான அன்பின் காரணமாக அவனது மார்க்கத்திற்காக தியாகம் செய்வதே இதன் நோக்கமாகும். ஆக, ஜமாஅத் அமைப்பு மக்களிடம், எவரது பெயரிலாவது சந்தா செலுத்துமாறு கூறி சந்தா வசூல் செய்தால் பிறகு அவர்கள் தவறிழைக்கின்றனர். சில முறை இவ்வாறான விஷயங்கள் எனக்கு தெரிய வருகிறது.

ஆக எவ்வாறிருப்பினும், பொதுவாக நான் பார்த்துள்ளேன். அதாவது பொருள் தியாகம் தொடர்பான அறிக்கையில் குறிப்பாக இதனை பார்க்க முடிகிறது. அதாவது ஏழை மக்களின் பொருள் தியாகம் தொடர்பான குறிப்புகளே அதிகமாக இருக்கின்றது. அவர்களிடம் நாம் அதிகமாக பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது. மேலும் நான் எனது பெரும்பான்மையான குத்பாக்களில் இவர்களைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளேன். சிலரது தியாகங்களைப் பார்த்து ஆச்சரியமாக இருக்கின்றது.

ஒருவரிடம் அதிகமான செல்வங்கள் இருந்து அதிலிருந்து அவர் எதையாவது வழங்கினால் அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. ஆனால் ஏழ்மையின் நிலையில், நெருக்கடியான நிலையில் இறைவனது அன்பைப்

பெறுவதற்காக இறைவனது மார்க்கத்திற்காக செய்யப்படும் பொருள் தியாகமே உண்மையான தியாகமாகும். அது அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கான வழியாகவும் அமைகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இத்தகைய பல்வேறு உதாரணங்கள் காணக் கிடைக்கின்றன.

ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு புத்தகத்தை அச்சடிப்பதற்காக பணத்திற்கான தேவை ஏற்பட்டது. எனவே ஒரு நண்பரிடம், இந்த தேவை உள்ளது. எனவே உங்களது ஜமாஅத்தில் இது தொடர்பாக எடுத்துக் கூறுங்கள். அதன் மூலம் உங்களது ஜமாஅத் இவ்வளவு சந்தாவை செலுத்தி விட வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் அவர்கள் ஜமாஅத்திடம் எடுத்துக் கூறுவதற்கு பதிலாக தம் சார்பாக நெருக்கடியான நிலையிலும் அவர்கள் அந்த தொகையை செலுத்தி விட்டார்கள். மேலும் இந்த நகரத்தைச் சார்ந்தவர்கள்தான் இந்த தொகையை கொடுத்ததுபோன்று அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இதைப் பற்றி தெரியாமல் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அந்த ஜமாஅத்தைச் சார்ந்த இன்னொரு நபரிடம் இதற்காக நன்றி தெரிவித்தவாறு, உங்களது ஜமாஅத் குறித்த நேரத்தில் மிகப்பெரும் உதவியை செய்துள்ளது என்று கூறினார்கள்.

எனவே அந்த நபருக்கு இந்த தியாகத்தை ஒரு தனிப்பட்ட நபர்தான் செய்துள்ளார் என்பது தெரிய வந்ததும் அந்த ஜமாஅத்தைச் சார்ந்த மற்ற நபர்கள், எங்களுக்கு ஏன் இந்த தொண்டிற்கான வாய்ப்பை கொடுக்கவில்லை என்று கருதியவாறு அவர் மீது கோபம் கொண்டார்கள். இந்த தொகையை செலுத்தியவர் முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் அவர்கள் ஆவார்கள். அவர்கள் அந்த நேரத்தில் தனது மனைவியின் தங்கத்தை விற்கு இந்த தொகையை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். நிச்சயமாக அன்னாரது மனைவியும் இந்த தியாகத்தில் பங்கெடுத்திருந்தார்கள். முன்ஷி அரேடே சாஹிப் முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் அவர்களின் நண்பர் ஆவார்கள். மேலும் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக இந்த தியாகம் தொடர்பாக தெரிய வந்ததும், அவர்கள் பல மாதங்கள் வரை முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் அவர்கள் மீது கோபமாக இருந்தார்கள். அதாவது எங்களுக்கு ஏன் தெரிவிக்கவில்லை? நீங்களே இந்த ஏற்பாட்டை ஏன் செய்தீர்கள்? என்று கோபம் கொண்டார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 4 பக்கம் 97,98)

ஆக இத்தகைய மக்களையே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியிருந்தான். அவர்கள் இறைவனது அன்பை பெறுவதற்காக எல்லா வகையான தியாகங்களுக்காகவும் ஆயத்தமாக இருந்தார்கள். இந்த முன்மாதிரியைத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் நிலைநாட்டினார்கள். மேலும் இதன்படி இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் செய்து காட்டினார்கள். மேலும் இது அன்றைய காலத்தின் விஷயம் மட்டுமல்ல. மாறாக, இதன் தொடர்ச்சி இன்று வரை நீடித்துள்ளது.

மக்கள் எவ்வாறு பல்வேறு திட்டங்களில் பொருள் தியாகம் செய்கின்றனர். மேலும் தம்மீதே ஏழ்மையை ஏற்படுத்திக் கொண்டு பொருள் தியாகம் செய்கின்றனர் என்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால் அல்லாஹ்வும் எவருக்கும் பாக்கி வைப்பதில்லை. அவர்களுக்கு திருப்பியும் வழங்கி விடுகின்றான். சில சம்பவங்கள், சில உதாரணங்களை இப்போது நான் உங்களுக்கு முன்னால் எடுத்துக் கூறுவேன். ஏனென்றால் இன்று வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பும் செய்யப்பட இருக்கின்றது. எனவே இந்த சம்பவங்கள் வக்ஃபே ஜதீது தொடர்பானவையாக இருக்கின்றன.

கேம்பியாவின் உள்ளூர் மிஷனரி கீபா ஜாலு சாஹிப் அவர்கள் ஒரு சம்பவத்தை குறிப்பிடுகின்றார். அந்த சம்பவத்திலிருந்து அல்லாஹ் பொருள் தியாகம் செய்பவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றான் என்று தெரிய வருகிறது. அவர்கள் கூறுகின்றார்கள்: அப்துல்லாஹ் ஈஜாவூ என்ற ஒரு புதிய அஹ்மதி நண்பர் தானியம் மற்றும் நிலக்கடலை விளைச்சலை செய்து வருகின்றார். ஆனால் கடந்த சில வருடங்களாகவே குறிப்பான எந்த விளைச்சலும் இருக்கவில்லை. அல்லாஹ் அவர்களது வயலில் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த வருடம் அவர்கள் தானியத்தை விற்று வக்ஃபே ஜதீது சந்தாவை செலுத்தி விட்டார்கள். அது ஏறக்குறைய 750 டலாஸி ஆகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த பொருள் தியாகத்தின் காரணமாக அல்லாஹ் அவர்களது விளைச்சலில் எந்த அளவிக்கு அபிவிருத்தியை ஏற்படுத்தினான் என்றால் கடந்த ஆண்டை விட மூன்று மடங்கு லாபம் அவர்களுக்கு கிடைத்தது. அவர்கள் அறுவடை செய்த பிறகு மேலும் ஆயிரம் டலாஸியை வக்ஃபே ஜதீதிற்காக செலுத்தினார்கள்.

அடுத்து கேம்பியாவின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு ஊரின் நண்பர் உஸ்மான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

கடந்த வருடம் அவர்கள் வக்ஃபே ஜதீதில் ஒரு பால்டி தானியத்தை தருவதாக வாக்குறுதி வழங்கியிருந்தார்கள். செல்வந்தரிடம் பொருளாதார வசதி இருக்கின்றது. லட்சக்கணக்கான பவுண்ட் வைத்திருப்பவர் ஆயிரம் டாலர் அல்லது ஆயிரம் பவுண்ட், அல்லது ஐந்தாயிரம் பவுண்ட் செலுத்தினால் அது அவருக்கு பெரிய தியாகம் கிடையாது. நகரத்தில் வசிக்கக்கூடிய, ஐரோப்பாவில் வசிக்கக்கூடியவருக்கு இது பெரிய காரியமல்ல. ஆனால் இந்த மக்களுக்கு இது மிகப்பெரிய தியாகமாகும்.

அவர்கள் ஒரு பால்டி தானியத்தை தருவதாக வாக்குறுதி வழங்கினார். அது உங்களுக்கு இங்கு ஐந்து, ஆறு பவுண்டில் கிடைத்து விடலாம்.

அவர்கள் கூறுகின்றார்கள்: கடந்த ஆண்டு மிகக்குறைவான விளைச்சல் இருந்தது. 12 மூட்டை அளவிற்கே விளைச்சல் இருந்தது. அவர்களது வீட்டின் செலவே மிகவும் கஷ்டமாகதான முழுமையாகிக் கொண்டிருந்தது. இருப்பினும் அவர்கள் தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வருடம் 30 மூட்டை தானியம் அவர்களுக்கு கிடைத்தது. அதுமட்டுமின்றி வேறு விளைச்சலில் அவர்களுக்கு 15 மூட்டை அளவிற்கு தானியம் கிடைத்தது.

ஆக கலப்பற்ற முறையில் அவர்கள் கொடுத்ததும் அல்லாஹ்வின் பார்வையில் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றால் அதனை அல்லாஹ் பல மடங்காக திருப்பி செலுத்தினான். மேலும் இதுவே அல்லாஹ்வை அடைவது மற்றும் அவன் மீதான நம்பிக்கையில் வலுப்பெறுவதற்கு காரணமாகவும் அவர்களுக்கு அமைகின்றது.

அடுத்து கேமரூனின் முஅல்லிம் எழுதுகின்றார்கள்: இது அல்லாஹ்வின் அருளின் இன்னொரு உதாரணமாகும். டகோயி என்ற ஊரின் ஒரு புதிய அஹ்மதி அஹ்மது சாஹிப் அவர்களுக்கு வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. அவர்கள் இரண்டு பால்டி தானியத்தை சந்தாவாக செலுத்தினார்கள்.

முஅல்லிம் அவர்களிடம், எனது விளைச்சலும் சரியாக இல்லை. என்னிடம் பணம் இல்லை. அரசாங்கம் எனக்கு உதவி செய்ய விரும்புகின்றது. ஆனால் அதற்காக அரசாங்கத்திற்கும் சிறிதளவு பணம் செலுத்த வேண்டியதுள்ளது. பிறகு அரசாங்கமும் தனது பங்கை கொடுக்கும் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: என்னிடம் எந்த தொகையும் இல்லை. இந்த தொகையை கூட என்னால் செலுத்த முடியாது. எனது பெயர் பட்டியலில் இருந்தாலும் எனக்கு எதுவும் கிடைக்காது. ஏனென்றால் நான் எந்த தொகையையும் செலுத்தவில்லை என்று கூறினார்கள். ஆக முஅல்லிம் சாஹிப் அவர்களிடம், நீங்கள் தஹஜ்ஜுத் தொழ ஆரம்பித்து விடுங்கள். மேலும் துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் அருள் செய்வான் என்று கூறினார்கள்.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்கள்: பிறகு அவர்கள் என்னிடம் வந்து, இறைவன் நமது துஆக்களை ஏற்றுக் கொண்டு விட்டான். நான் செலுத்த வேண்டிய எந்த தொகையையும் அரசாங்கத்திற்கு செலுத்தவில்லை. இருப்பினும் சம்பந்தப்பட்ட துறையானது, பம்பிங் மிஷினை வழங்கியுள்ளது. மேலும் அது மட்டுமின்றி ஐந்து லட்சம் பிரான்க் ஷிஃபாவையும் விளைச்சலுக்காகவும் வழங்கியுள்ளது என்று கூறினார்கள்.

அவர்கள் அவர்கள் தனது வயலில் பெரும் முயற்சி செய்து பணி செய்யத் துவங்கினார்கள். இதன் காரணமாக அவர்களது விளைச்சல் நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் எனது சாதாரண தியாகத்தை ஏற்றுக் கொண்டான். மேலும் அதற்கு பிரதிபலனாக அவன் எனக்கு அருட்களை வழங்கினான். மேலும் அவர்களும் தனது வக்ஃபே ஜதீது சந்தாவையும் இரட்டிப்பாக செலுத்தினார்கள்.

இந்தோனேஷியாவின் முரப்பி நூர் ஹைர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு கணவன் மனைவி சாதாரண வாழ்க்கையை கழித்து வருகின்றனர். ஆனால் அவர்கள் முறையாக சந்தா செலுத்தி வருகின்றார்கள். அவர்களது வருமானத்தில் சிறிது தொகையை தனியாக எடுத்து ஒரு பாக்ஸில் போட்டு விடுவார்கள். சுற்றுப் பயணத்தின்போது அவர்களிடம் எப்போது முபல்லிக் சென்றாலும் அவர்கள் அந்த தொகையை சந்தாவாக வழங்கி விடுவார்கள். அவர்கள் தொலை தூரத்தில் வசித்து வருகின்றார்கள்.

ஒரு முறை ஒரு வருடமாக இவர்களது ஜமாஅத்திற்கு எந்த முபல்லிக்கும் செல்ல முடியவில்லை. ஆனாலும் அவர்கள் சந்தாவின் தொகையை தொடர்ச்சியாக ஒன்று சேர்த்து வந்தார்கள். ஒரு வருடத்திற்குப் பிறகு அங்கு சுற்றுப் பயணத்தில் நமது முபல்லிக் சென்றபோது அந்த பாக்ஸில் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருந்த பெரும் தொகையை அவர்கள் சந்தாவாக செலுத்தி விட்டார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: இந்த முறை எங்களுக்கு அதிகமான லாபம் கிடைத்தது. எனவே எங்களுக்கு சந்தாவின் அருள்களின் மீதும் நிச்சய உறுதியும் ஏற்பட்டு விட்டது. மேலும் ஈமான் வலுப்பெற்று விட்டது. நாங்கள் இதன் அருட்களை பார்க்கின்றோம்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ஒரு முறை ஒருவர் எங்களை ஏமாற்றி விட்டார். என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்த்ததில், நாங்கள் சரியான முறையில் சந்தா செலுத்தவில்லை. எனவேதான் நஷ்டம் ஏற்பட்டது என்பது தெரிய வந்தது.

எனவே அந்த நேரத்திலிருந்து அவர்கள் ஒரு பாக்ஸை தயார் செய்து தனது வருமானத்திற்கேற்ப சரியான அளவில் அதனை நிரப்ப ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சந்தாவின் தொகையை நாங்கள் தனியாக எடுத்து வைக்காதவதை எங்களுக்கு நிம்மதி கிடைப்பதில்லை.

ஆக இவ்வாறும் அல்லாஹ் சிலரது சீர்திருத்தத்திற்கான வழியை ஏற்படுத்துகின்றான். பிறகு அவர்களது ஈமாலும் வலுப்பெறுகிறது.

இந்தோனேஷியாவின் முபல்லிக் பஷீருத்தின் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒரு நண்பர் தனது வக்ஃபே ஜதீத் சந்தாவாக ஐந்து லட்சம் இன்தோனேஷியன் ரூபாயை செலுத்தினார். இந்தோனேஷியன் ரூபாயின் மதிப்பு குறைவுதான். எனினும் அவர்களுக்கு அது மிகப்பெரிய தொகையே ஆகும். சில நாட்களுக்குப் பிறகு ஒருவர் தனது நிலத்தை அவர்களிடம் விற்று விட்டார். அதனை அவர்கள் 15 மில்லியன் இந்தோநேஷியன் தொகையைக் கொடுத்து வாங்கியிருந்தார்கள். ஆனால் சில வாரங்களுக்குப் பிறகு ஒரு நபர் அந்த இடத்தை அவர்களிடமிருந்து 50 மில்லியன் இந்தோனேஷினிற்கு வாங்கினார். ஆக 15 மில்லியன் கொடுத்து அவர்கள் வாங்கினார்கள். மேலும் சில வாரங்களிலேயே 50 மில்லியன் தொகைக்கு அவர்களிடமிருந்து ஒருவர் அந்த இடத்தை வாங்கினார்.

இப்போது இவர்களது நம்பிக்கை தொடர்பாக கூறுகின்றார்கள்: வக்ஃபே ஜதீது சந்தாவின் அருளினால் சிறிது நேரத்திலேயே எனக்கு 35 மில்லியன் லாபம் கிடைத்துள்ளது. ஒரு உலகவாதி இதனை தனது வியாபார யுக்தி என்று கருதுவார். நான் எத்தகைய யுக்தியை மேற்கொண்டவாறு வியாபாரம் செய்துள்ளேன் என்றால் சில வாரங்களிலேயே 15 மில்லியனிலிருந்து 35 மில்லியனாக ஆக்கினேன் என்று கருதுவார். ஆனால் எவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெற விரும்புகின்றார்களோ அவனது அன்பை பெற விரும்புகின்றார்களோ, மேலும் அவனுக்காக தியாகங்களைச் செய்கின்றார்களோ அவர்களது உள்ளங்களில், நான் அல்லாஹ்விற்காக சந்தா செலுத்தினேன். தியாகம் செய்தேன். அதேபோன்று அல்லாஹ்வும் எனக்கு அதிகப்படுத்தி வழங்கினான் என்ற உணர்வே இருக்கும்.

ஈமானில் வலுப்பெறுதல் தொடர்பான இன்னொரு உதாரணம் இந்தோனேஷியாவைச் சார்ந்த முபல்லிக் மஃஸூம் சாஹிப் அவர்களுடையதாகும்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: ஓர் அஹ்மதிக்கு ஆரம்ப காலத்தில் மிகவும் நெருக்கடியான நிலைமை இருந்தது. அவருக்கு தங்குவதற்கான இடம் இல்லாமல் இருந்தது. அவர் மிஷன் ஹவுஸில் தங்கி வந்தார். அவர் மீனை பிடித்து விற்க ஆரம்பித்தார். சிறிய அளவில் வியாபாரத்தை ஆரம்பம் செய்தார். பெரும் முயற்சி செய்தார். குறைவான வருமானம் இருந்தபோதிலும் பொருள் தியாகத்தில் அவர்கள் பின்வாங்கவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு அவர்களது நிலைமைகள் மாறத் துவங்கின. தற்போது இந்தப் பகுதியில் இவர்களது வக்ஃபே ஜதீது சந்தா அனைவரையும் விட அதிகமாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்கள் வஸிய்யத்தும் செய்துள்ளார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: இவை அனைத்தும் எனது பொருள் தியாகத்தின் விளைவே ஆகும்.

கேம்பியாவின் ஒரு நண்பர் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களுக்கு தனது குழந்தையின் ஸ்கூல் ஃபீஸை கட்ட மிகவும் இக்கட்டான நிலைமை இருந்தது. அவர்கள் சென்ட்ரல் முபல்லிக் சாஹிப் அவர்களிடம், மிகவும் கஷ்டமான நிலை இருக்கின்றது. எனது பொருளாதார நிலை சரியாக இல்லை என்று கூறினார்கள்.

எனவே முபல்லிக் அவர்களிடம், பொருள் தியாகம் செய்யுங்கள். அல்லாஹ் அருள் செய்வான் என்று கூறினார்கள். எனவே அவர்கள் 250 டலாஸியை மாதாந்திர வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சரியாக சந்தா செலுத்திய ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்களுக்கு 5000 டலாஸி மாதாந்திர வருமானத்தில் வேலை கிடைத்தது. அதன் மூலம் அவர்கள் மிகவும் சுலபமாக தனது குழந்தைகளின் கல்விக் கட்டணத்தை செலுத்தி விட முடியும். அதுமட்டுமின்றி வீட்டின் அன்றாட தேவைகளும் பூர்த்தியாகியது.

அவர்கள் அல்லாஹ்வின் அருளை மிகவும் அதிகமாக மக்களிடம் எடுத்துக் கூறியவாறு, சந்தாவின் அருளினால் அல்லாஹ் எனக்கு அருள் செய்தான். எனது ஈமானை வலுப்படுத்தினான். மேலும் எனது ரிஸ்கில் அபிவிருத்தியை ஏற்படுத்தினான் என்று கூறத் திரிந்தார்கள்.

ஏழைகள் எவ்வாறு தியாகங்கள் செய்கின்றனர்? பிறகு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றனர்? அல்லாஹ்வும் இந்த நம்பிக்கையின் காரணமாக எவ்வாறு நடந்து கொள்கின்றான்? என்பது தொடர்பாக கினி பஸாவின் மிஷ்னரி சாஹிப் ஒரு சம்பவத்தை குறிப்பிடுகின்றார்கள்.

ஒரு நண்பர் மேன்டேரோ கமாரா சாஹிப் அவர்களுக்கு வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை செலுத்துவது தொடர்பாக கவனமூட்டப்பட்டது. அதற்கு அவர்கள், என்னிடம் இப்போது 4000 பிராண்க் ஷிஃபா இருக்கிறது. இதனை இன்று எனது உணவிற்காக நான் வைத்துள்ளேன். இந்த தொகைக்கு மிகவும் குறைவான மதிப்பே உள்ளது. இவர்களது குடும்பமும் பெரியது. அவர்கள் அவர்களது உணவிற்காக இதனை வைத்திருந்தார்கள். எவ்வாறிருப்பினும், நான் ஏதாவது செய்கின்றேன் என்று கூறினார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் உணவிற்காக வைத்திருந்த தொகையை சந்தாவாக செலுத்தி விட்டார்கள். மேலும் உணவிற்காக ஒருவரிடம் கடன் பெற்றார்கள். இன்னும் சொல்வதென்றால் கடன் வாங்குவதற்காக சென்று விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மறுநாள் அவர்களது மகள் நகரத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் இவர்களுக்காக இரண்டு மூட்டை அரிசி மற்றும் எண்ணை மற்றும் சிறிது தொகையும், வேறு சில பொருட்களையும் எடுத்தக் கொண்டு வந்திருந்தார்கள். இதன் விளைவாக அவர்களுக்கு எந்த நம்பிக்கை ஏற்பட்டதென்றால், நான் உணவிற்காக எந்த பணத்தை வைத்திருந்தேனோ அதனை அல்லாஹ்விற்காக சந்தாவாக செலுத்தியதனால்தான் இந்த அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. மறுநாளே எண்ணற்ற பொருட்கள் எனக்கு உண்பதற்காக கிடைத்து

விட்டது. அதாவது இவர்கள் பட்டினியாக இருந்து கொண்டு தியாகம் செய்யக் கூடியவர்கள் ஆவர்.

இன்னொரு உதாரணமும் உள்ளது. பிரான்ஸின் அமீர் சாஹிப் அவர்கள் அல்லாஹ் எவ்வாறு ஈமானை அதிகப்படுத்துகின்றான் என்பது தொடர்பாக கூறுகின்றார்கள்: பிரான்ஸின் ஒரு அரபு நண்பர் இருக்கின்றார். கடந்த வருடம் நான் ஆற்றிய பொருள் தியாகம் தொடர்பான குத்பா தொடர்பாக கூறுகின்றார்: நான் வக்ஃபே ஜதீத் குத்பாவை கேட்டேன். அது என்னிடத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களின் வயது 46 ஆகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கடுமையான பொருளாதாக நெருக்கடியில் இருந்தேன். இதற்கு முன்பு எனக்குத் இத்தகைய நெருக்கடியை சந்திக்க நேர்ந்ததில்லை. பேங்கிலும் கடன் வாங்க நேர்ந்தது. கடனை திருப்பிச் செலுத்துமாறு பேங்கிலுள்ளவர்களும் என்னிடம் கூறி வந்தார்கள். நான் எனது கணக்கை சரி செய்யவில்லை என்றால் எனது வங்கிக் கணக்கை மூடி விடுவதாக எச்சரிக்கையும் செய்திருந்தனர். இன்னும் சொல்வதென்றால் அதற்காக சில நேரங்களில் அபராதம் செலுத்த வேண்டியது வருகிறது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது பகுதியில் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. இந்த கூட்டத்திற்கு முன்புதான் எனது நண்பர் எனக்கு 20 யூரேவை வலுக்கட்டாயமாக கொடுத்திருந்தார். நான் இந்த தொகையை எனது பையில் வைத்தேன். வேறு எதுவும் என்னிடம் இருக்கவில்லை. இந்த தொகை சில நாட்களுக்கு எனக்கு உதவும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் 20 ரூபாயை வைத்திருந்தேன். ஆனால் கூட்டத்திற்கு சென்றபோது செகரட்டரி மால் அவர்கள் சந்தா தொடர்பாக பேசினார். எனவே நான் 20 ரூபாயை சந்தாவாக செலுத்தி விட்டேன். சில நாட்களுக்குப் பிறகு எனக்கு பேங்கிலிருந்து ஒரு போன் வந்தது. எனது நிலைமையோ மோசமாகிக் கொண்டிருந்தது. கெட்ட செய்தியையே கேட்க நேர்ந்து கொண்டிருந்தது. எனவே கெட்ட செய்திதான் இருக்கும். மேலும் பேங்கை சார்ந்தவர்கள் என்னிடம் கடுமையாகவே நடந்து கொள்வார்கள் என்று நான் எண்ணினேன். ஆனால் வங்கியை சார்ந்தவர்கள் என்னிடம், சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்தவர்கள் உங்களது வங்கிக் கணக்கை மூட வேண்டாம் என்று கட்டளை பிறப்பித்துள்ளனர். மேலும் 600 யூரோ வை உங்களது கணக்கில் செலுத்திவிடுமாறும் கூறியுள்ளார்கள் என்று கூறினார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது எனக்கு மிகவும் வியப்பிற்குரிய விஷயமாகும். ஏனென்றால், வங்கியின் நடவடிக்கைகள் மிகவும் கடுமையாக இருக்கும்.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: சில நாட்களுக்குப் பிறகு எனது பணிக்கான இன்ஸூரன்ஸிலிருந்து எனக்கு ஒரு மிகப்பெரும் தொகையை கொடுத்தார்கள். அது ஒரு நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவை அனைத்தும் வக்ஃபே ஜதீத் குத்பாவை கேட்டது மற்றும் சிறிய தொகையை சந்தாவாக செலுத்தியதற்குப் பிறகே நடந்தது. இதற்கு முன்பு, என்னுடனும் அற்புதங்கள் நிகழுமா? பெரிய பெரிய மக்களின் அற்புதங்களின் சம்பவங்களை கூறுகின்றார்கள். ஆனால் என்னுடன் எந்த அற்புதமும் ஒருபோதும் நடந்தது கிடையாதே? என்று கருதி வந்தேன். ஆனால் இப்போது அல்லாஹ் எனக்கு சந்தாவின் அருளின் முன்மாதிரியை காட்டி விட்டான். இது உண்மையிலேயே அற்புதம்தான் என்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

ஹோட்டியின் முபல்லிக் கைஸர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இதுவும் அல்லாஹ்வின் நடைமுறை மற்றும் ஈமான் வலுப்பெறுதல் தொடர்பான ஒரு சம்பவமாகும். தற்போது இந்த சம்பவம் பல்வேறு பகுதிகளில் நடக்கின்றது. அதாவது சில ஆப்ரிக்காவிலும், சில அமெரிக்காவிலும், சில ஐரோப்பாவிலும், சில வடக்கிலும், சில தெற்கிலும் நடைபெற்றதாகும். ஒருவர் மற்றொருவருடன் எவ்விதத் தொடர்பும் கிடையாது. ஆனால் சம்பவம் ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாகும்.

இப்ராஹீம் சாஹிப் என்ற ஓர் அஹ்மதி இளைஞர் சில நாட்களுக்கு முன்பு அலுவலகத்திலிருந்து விடு திரும்பி கொண்டிருந்தார். வழியில் அவரது ஒரு ஃபைல் விழுந்து விட்டது. அதில் சில முக்கியமான தாள்களும், சான்றிதழ்களும் இருந்தன. மேலும் 13000 கோர்த் தொகையும் இருந்தது. இது அங்குள்ள கரன்ஸி ஆகும். அவர்கள் திரும்பிச் சென்று எல்லா வழிகளையும் பார்த்தும் அவர்களுக்கும் ஃபைல் கிடைக்கவில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது உள்ளத்தில், வக்ஃபே ஜதீதில் ஆயிரம் கோர்த் வாக்குறுதி வழங்கியிருந்தேன். என்னிடம் பணம் இருந்தாலும், இல்லையென்றாலும் எங்கிருந்தாவது பெற்று அதனை கண்டிப்பாக முழுமை செய்வேன் என்று உறுதி எடுத்துக் கொண்டேன். ஆகவே நான் ஒருவரிடமிருந்து கடன் வாங்கி வாக்குறுதிக்கேற்ப எனது வாக்குறுதியை செலுத்தி விட்டேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சந்தா செலுத்திய அதே நாளின் மாலைப்பொழுதில் ஒரு நபரின் ஃபோன் எனக்கு வந்தது. அவர் உங்களது ஃபைல் என்னிடம்தான் உள்ளது. என்னிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அங்கு உடனடியாக சென்றேன். அந்த நபர் என்னிடம் ஃபைலை கொடுத்தார். மேலும் அவர் என்னிடம், உங்கள் இடத்தை தெரிந்து கொள்வதற்காக எனக்கு உங்களது ஃபைலை திறந்து உள்ளே பார்க்க நேரிட்டது. எனவே நான் உங்கள் ஃபைலை திறந்து பார்த்தேன். எனவே நீங்கள் உங்களது பணம் மற்றும் காகிதங்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். எனவே நான் சரிபார்த்தேன். அனைத்து தொகையும், காகிதங்களும் உள்ளே இருந்தன.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினேன். மேலும் சந்தாவின் அருளினால்தான் எனது தொலைந்துபோன காகிதங்கள் எனக்கு கிடைத்தன என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. வெளிப்படையில் இந்த தொகையும், ஃபைலும் கிடைப்பது கடினமான ஒன்றே ஆகும்.

கினிகனாகரியின் முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்கள்: கின்யா மண்டலத்திலுள்ள ஒரு ஊரைச் சார்ந்த அபூபக்ர் சாஹிப் என்ற ஓர் அஹ்மதி நண்பருக்கு வக்ஃபே ஜதீத் செலுத்துவது தொடர்பாக கவனமூட்டப்பட்டது. முதலில் அவர்கள் ஏதாவது கூறினாலும் பிறகு அவர்கள் தனது வாக்குறுதியை செலுத்தி விட்டார்கள். சந்தா செலுத்திய சில காலத்திற்குப் பிறகு அவர்கள் நமது உள்ளூர் மிஷனரியிடம், உண்மையிலேயே அஹ்மதிய்யா ஜமாஅத் இறை இயக்கம்தான் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அரசாங்க பணியாளர் ஆவேன். சிறிது காலத்திற்கு முன்பு எனது கால் ஒரு விபத்தில் உடைந்து விட்டது. போதுமான மருத்துவ வசதி இல்லாததன் காரணமாக அது சரியான முறையில் ஒன்றிணையவில்லை. இதன் காரணமாக எனது ஒரு கால் சிறியதாகி விட்டது. இதற்கான கடுமையான துன்பமும் எனக்கு இருந்தது. ஒரு மருத்துவர் என்னிடம், அறுவை சிகிச்சை செய்தால் இது சரியாகி விடும் என்று கூறினார். எனவே இதற்காக சிறிது காலமாக நான் தொகையை ஒன்று சேர்த்து வந்தேன். எனது கால்களில் அறுவை சிகிச்சை செய்வதற்காக தொகையையும் ஒன்று சேர்த்தேன். ஆனால் மிஷனரி அவர்கள், சந்தாவைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். எனவே நான் இப்போது சந்தாவை செலுத்த வேண்டாம். அறுவை சிகிச்சைக்காக பணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். ஆனால் அல்லாஹ் எனக்கு தைரியத்தை வழங்கினான். எனவே நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தாவறு முழு தொகையையும் சந்தாவாக செலுத்தி விட்டேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது நடந்து இரண்டு நாட்கள் கூட கழியவில்லை. எனது அலுவலகத்திலிருந்து எனக்கு கடிதம் வந்தது. அதில் எனது அறுவை சிகிச்சையின் முழு செலவையும் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளும் என்றும் எங்கு நான் விரும்புகின்றேனோ அங்கு சிகிச்சை செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது முழுக்க முழுக்க சந்தாவின் அருளே ஆகும். இது தற்செயலாக நடைபெற்ற விஷயமல்ல. எவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றார்களோ, அவர்களுடனான அல்லாஹ்வின் நடைமுறை ஆகும். அவர்களது ஈமானை வலுப்பெறச்

செய்வதற்காகவும், இதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்திற்கான ஆதாரமும் இருக்கின்றது.

காதியானிலிருந்து மாமூன் ரஷீத் சாஹிப் செகரட்டரி வக்ஃபே ஜதீத் அவர்கள் எழுதுகின்றார்கள்: சுலைஜா சாஹிப் அவர்களின் வக்ஃபே ஜதீத் சந்தா தமது வீட்டின் சில கஷ்டங்களின் காரணமாக பாக்கி இருந்தது. அவர்களது சகோதரரர், அவர்களிடம் இப்போது வருடம் முடிவடையப் போகிறது. விரைவாக சந்தாவை செலுத்துங்கள் என்று கவனமூட்டினார்கள். ஆனால் அவர்களது வங்ககிக் கணக்கில் முழுமையாக சந்தா செலுத்துவதற்கான தொகை இல்லாமல் இருந்தது. இன்னும் சொல்வதென்றால், மொத்த தொகையில் 30 சதவிகிதம்தான் அவர்களது வங்கிக் கணக்கில் இருந்தது. எவ்வாறு முழுமையாக செலுத்த முடியும் என்று அவர்கள் மிகவும் கவலையில் இருந்தார்கள். இறுதியில் அவர்களது வங்கிக் கணக்கில் இருந்த தொகையை சந்தாவாக செலுத்தினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் அற்புதமான முறையில் சில நொடிப்பொழுதிலேயே எஞ்சிய தொகையையும் செலுத்தக்கூடிய அளவிலான தொகை எனது அகாவுண்டிற்கு வந்தது. எனவே அவர்கள் அப்போதே அந்த தொகையை தனது வாக்குறுதிக்கேற்ப செலுத்தி விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எப்போதும்ட வாக்குறுதியை வருடம் முடிவதற்கு முன்பாகவே அவர்கள் செலுத்தி விடுவார்கள். ஆனால் இந்த வருடம் அவர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளின் நோயின் காரணமாக அவர்களுக்கு பாக்கி இருந்தது. அதற்காக அவர்கள் மிகவும் கவலையில் இருந்தார்கள். ஆனால் அல்லாஹ் அற்புதமான முறையில் அதற்கான ஏற்பாட்டைச் செய்தான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது எனது ஈமான் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது.

இந்தியாவிலிருந்து அப்துல் மஹ்மூத் சாஹிப் இன்ஸ்பெக்டர் வக்ஃபே ஜதீத் அவர்கள் ஒரு நண்பரின் சம்பவத்தை கூறுகின்றார்கள்: பீர் பூம் மாவட்டம் பங்காளிலுள் ஒரு ஊரில் நடைபெற்ற ஒரு சம்பவமாகும். அதாவது அவர்களுக்கு மலிகை சாமான்களின் மொத்த விற்பனைக் கடை இருந்தது. அல்லாஹ்வின் அருளால் நன்றாக நடைபெற்று வருகிறது. அவர்கள் தினமும் கடையை திறந்த உடன் 100 ரூபாயை ஒரு பெட்டியில் தொடர்ச்சியாக போட்டு வந்தார்கள். அதிலிருந்து தனது வாக்குறுதிக்கேற்ப சந்தாவை செலுத்தி வந்தார்கள். காலையில் வந்ததுமே முதல் பணி, 100 ரூபாயை பெட்டியில் போட்டு விடுவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் கடையில் பொருட்களை வாங்குவதற்காக மிகக்குறைவானவர்களே வந்தனர். மேலும் அவர்களுக்குரிய செலவு முழுமையாகவில்லை. எனவே அடுத்த நாள் அவர்கள் 100 ரூபாயை போடவில்லை. அடுத்த நாள் அவர்கள் கடையை திறந்த உடன் 100 ரூபாயை போடுவதற்கு பதிலாக 300 ரூபாயை அந்த பெட்டியில் போட்டார்கள். மேலும் உள்ளத்தில், அல்லாஹ்வுடன் ஏன் வியாபாரம் செய்யக் கூடாது என்று எண்ணினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருள் எந்த அளவுக்கு ஏற்பட்டது என்றால் அன்றைய நாளே மதியத்திற்குப் பிறகு என்னிடம் 8 நபர்கள் வந்தனர். சிறிய வேலையாக இருந்தாலும் பெரிய வியாபாரமாகும். அதிகமான நேரம் ஆகுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எந்த அளவுக்கு பணியில் ஈடுபட்டு விட்டேன் என்றால் பொருளை வாங்க வந்த ஒருவரிடம் நாளை வாருங்கள் என்று கூறி திருப்பி அனுப்பி விட்டேன். மற்றவர்களுக்கு பொருட்களை கொடுத்த முடிக்க இரவின் நீண்ட நேரம் ஆகிவிட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் இந்த நாளில் அதிகமான வருவாய் கிடைத்தது.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் மனிதன் மீது மகிழ்ச்சியடைகின்றபோது எந்த அளவுக்கு கொடுக்கின்றான் என்றால் மனிதனின் இரண்டு கைகளாலும் அதனை பாதுகாக்க முடியாது.

கினி பஸாவ் மண்டலத்தின் மிஷ்னரி அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மஸ்கோத்தா சாஹிபா ஒரு பலவீனமான பெண்மணி ஆவார்கள். அவர்களுக்கு வக்ஃபே ஜதீத் செலுத்துவது தொடர்பாக கவனமூட்டப்பட்டபோது, நான் எனது வாக்குதிற்கேற்ப பணத்தை ஒன்று சேர்த்து வைத்திருந்தேன். ஆனால் நேற்று இரவு எனது சகோதரனை பார்க்க சென்றபோது வழியில் அந்த பணம் தொலைந்து விட்டது. நான் அந்த பணத்தை தேடிக் கொண்டிருக்கின்றேன். கிடைத்த உடனேயே அதனை நான் செலுத்தி விடுவேன் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு அந்தப் பெண்மணி பணத்தை தேடிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் அது அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனவே அவர்கள் தனது மகளிடம் சிறிது தொகையை கடனாக பெற்று வக்ஃபே ஜதீதில் செலுத்தி விட்டார்கள். இந்த தொகையை செலுத்திய பிறகு அவர்கள் மீண்டும் தேட முயற்சி செய்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சில மீட்டர் தூரம்தான் சென்றிருப்பேன். ஒரு பிளாஸ்டிக் பையில் மூடி வைத்திருந்த அந்த பை சாலையின் நடுவே கிடந்தது. எனவே நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். அடுத்த நாள் திரும்பி வந்து எனது வாக்குதிறுதிக்கேற்ப முழுமையாக செலுத்தினேன்.

இவர்கள் மக்களிடம், இது வக்ஃபே ஜதீத் சந்தாவின் அருளே ஆகும். அல்லாஹ் தொலைந்துபோன தொகையை எனக்கு திருப்பி கொடுத்து விட்டான் என்று கூறினார்கள்.

மாலி மண்டலத்தின் சிகாஸேவின் முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அஹ்மத் பிலால் சாஹிப் ஒரு புதிய அஹ்மதி ஆவார்கள். அவர்கள் மிஷன் ஹவுஸிற்கு வந்து, நான் இதற்கு முன்பு தொடர்ச்சியாக சந்தா கொடுத்து வந்தேன். ஆனால் பிறகு சிறிது பொருளாதார கஷ்டத்தின்าக காரணமாக சந்தா செலுத்த முடியாமல் போயிற்று என்று கூறினார்கள்.

அவர்கள் ஒரு நாள் கனவில் கண்டார்கள். அதாவது அந்த மக்கள் ஒரு கூட்டத்துடன் ஒரு பரந்த வழிப்பாதையில் நடந்து சென்று கொண்டிருக்கின்றனர். அந்த வழிப்பாதை சிறிது தூரம் சென்ற பிறகு பல பாதைகளாக பிரிந்து விட்டது. ஆனால் பிரிந்து சென்ற அனைத்து பாதைகளும் மோசமான பாதைகளாக இருந்தது. அப்போது அவர்கள் துஆ செய்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு வாகனம் வந்தது. அது அவர்களை அழைத்துக் கொண்டு வானத்தின் பக்கம் சென்று விட்டது. பிறகு மோசமான பாதை முடிவுற்றதும் அந்த வாகனம் அவர்களை மீண்டும் பரந்த வழிப்பாதையில் அவர்களை இறக்கி விட்டு விட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அங்கு அவர்கள் ஒரு பெரியவரை கண்டார்கள். அந்த பெரியவர் இவர்களிடம், இந்த வாகனம் நீங்கள் செலுத்திய சந்தாவின் காரணமாக உங்களை அழைத்துச் சென்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நேரங்களில் கஷ்டங்கள் வருகின்றது. ஆனால் ஓர் அஹ்மதி தொடர்ச்சியாக இறைவனது வழியில் சந்தா செலுத்துகின்றபோது அல்லாஹ் கஷ்ட நிலைமையின்போது அவர்களுக்கு எளிமையை ஏற்படுத்தி விடுகின்றான். எனவே அந்த புதிய அஹ்மதி சந்தாவை செலுத்தினார். மேலும் இனி என்ன நடந்தாலும், சந்தா செலுத்துவதில் சோம்பேறித்தனத்தை காட்ட மாட்டேன் என்று அவர் கூறினார்.

அடுத்து தன்ஸானிய்யாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அரோஷா மண்டலத்தில் ஒரு ஜமாஅத்தில் சந்தா தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. ஒரு ஏழைப் பெண்மணி ஃபாத்திமா சாஹிபா அவர்கள் பழங்களை விற்று வாழ்க்கையை கழித்து வருகின்றார்கள். அவர்கள் இரண்டு நாட்களின் வருமானத்தை வக்ஃபே ஜதீத் சந்தாவாக செலுத்தி விட்டார்கள். மேலும் தமது குடும்பத்தையும் வக்ஃபே ஜதீதில் இணைத்தார்கள்.

இதே போன்று ஜமாஅத்தின் ஒரு முதிய பெண்மணிக்கும் இது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. எனவே அவர்கள் அடுத்த நாள் காலை 8 மணிக்கு மிஷன் ஹவுஸிற்கு வந்தார்கள். மேலும் 5000 ஷிலிங் வக்ஃபே ஜதீதில் செலுத்தினார்கள்.

ஆக இந்த மக்களைப் பற்றிதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இந்த மக்கள் எத்தகைய தியாகங்களைச் செய்கின்றனர் என்பதைப் பார்த்து எனக்கு வியப்பு ஏற்படுகின்றது என்று கூறினார்கள்.

தன்ஸானிய்யாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அங்கு கடந்த ஆண்டை விட பொருளாதார நிலை மிகவும் நெருக்கடியில் இருக்கிறது. ஆனால் அஹ்மதிகள் மிகவும் கலப்பற்ற முறையில் பொருள் தியாகத்தில் பங்கு பெறுகின்றார்கள். அரோஷா நகரத்தின் ஒரு நண்பர் வஸீரி சாஹிப் அவர்கள், பத்திரிகையை விற்று வாழ்க்கையை கழித்து வருகின்றார்கள். அவர்களுக்கு வக்ஃபே ஜதீத் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. எனவே அவர்கள் தமது சக்திக்குட்பட்டவாறு செலுத்தியவாறு, இனிமேல் ஒவ்வொரு நாளும் ஒரு கப் டீ யின் செலவை குறைத்துக் கொண்டு அந்த தொகையை சந்தாவாக செலுத்துவேன் என்று கூறினார்கள்.

ஏழை மக்கள் இவ்வாறும் பணத்தை மிச்சப்படுத்துகின்றனர். அதாவது ஒரு கப் டீ ஐ குடிக்க மாட்டேன். அதன் பணத்தை சந்தாவில் செலுத்தி விடுவேன். எவ்வாறு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறலாம் என்ற உணர்வுதான் அவர்களிடம் காணப்படுகிறது.

தன்ஸானிய்யாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மாலி மண்டலத்தின் ஒரு ஜமாஅத்தைச் சார்ந்த கலப்பற்ற இளைஞர் வக்ஃபே ஜதீத் நிதியாண்டு முடிவடைவதற்கு முன்பாகவே முழு தொகையையும் செலுத்தி விடுவார்கள். ஆனால் இந்த வருடம் பொருளாதார நிலையின் நெருக்கடியின் காரணமாக அவர்களுக்கு 15000 சிலின்ங் பாக்கியிருந்தது. அவர்களிடம் மிகக் குறைவான தொகையே இருந்தது.

ஷிலிங்கிற்கும் எவ்வித மதிப்பும் கிடையாது. மிகக் குறைவான மதிப்பு உள்ளது. எனவே அவர்கள் மாதத்தின் இறுதியில் இந்த தொகையை சந்தாவாக செலுத்தி விட்டால் பிறகு அவர்களிட செலவிற்கு எந்த தொகையும் இருக்காது என்று எண்ணினார்கள். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு இந்த தொகையை சந்தாவில் செலுத்தி விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மறுநாளே அவர்களுக்கு அலுவலகத்திலிருந்து போன் வந்தது. அதாவது அவர்களுக்கு கடந்த மூன்று மாதத்தின் சில பில்ஸ்களின் தொகைகள் செலுத்தப்பட இருந்தது. அந்த பில்ஸ் கிளியராகி விட்டது. அதேபோன்று புதிய வருடத்தில் அவர்களது மாத வருமானமும் அதிகரிக்கப்பட்டது. அவர்களது ஈமான் என்னவென்றால், சந்தாவின் அருளினாலேயே சில நாட்களிலேயே எனக்கு ஆறு மடங்கு அதிகமாக தொகை கிடைத்து விட்டது என்பதாகும். அவர்களுக்கு வீட்டின் செலவை எப்படி மேற்கொள்வது என்ற நிலை இருந்தது. ஆனால் அல்லாஹ் ஆறு மடங்கு அதிகப்படுத்தி பணத்தை வழங்கி விட்டான்.

புர்கினோ ஃபாஸோவின் காபா மண்டலத்தின் முபல்லிக் எழுதுகின்றார்கள்: அப்தோ சாஹிப் என்ற ஓர் அஹ்மதி சந்தா செலுத்துவதில் பங்கெடுத்து வந்தார்கள். எனினும் அவர்கள் தொடர்ச்சியாக செலுத்த மாட்டார்கள். அவர்கள் இவ்வாறு எண்ணம் கொண்டார்கள். அதாவது அடுத்த வருடம் அனைத்து சந்தாக்களிலும் நான் பங்கெடுக்க முயற்சி செய்வேன் என்று எண்ணினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முடிவெடுத்த பிறகு அல்லாஹ்வின் அருளால் சந்தாவை நான் தொடர்ச்சியாக செலுத்தி வருகின்றேன். நான் தொடர்ச்சியாக செலுத்தி வருவதனால் எனது அனைத்து பிரச்சனைகளும், செல்வமும், வியாபாரமும் ஆகிய அனைத்திலும் பரக்கத் ஏற்பட ஆரம்பித்து விட்டது. ஆக எனக்கு பல கஷ்டங்கள் இருந்தன. அதுவும் மெதுமெதுவாக முடிவு பெற்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: கடந்த மாதம்தான் எனது மனைவி கருவுற்றார்கள். மருத்துவ செலவுக்கா என்னிடம் பணம் இருக்கவில்லை. ஆனால் டெலிவரி நேரத்தின்போது அல்லாஹ் எனக்கு உதவி செய்தான். மேலும் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டது. மகளும் பிறந்தாள். தாயும், மகளும் நலமுடன் உள்ளனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கண்ட இவை அனைத்தும் சந்தாவின் அருளினாலேயே ஆகும்.

அடுத்து ரஷ்யாபின் முபல்லிக் எழுதுகின்றார்கள்: ஹுதாயானூ சாஹிப் ஆர்மீனியன் ஆவார். ஆனால் ரஷ்யாவில் இருக்கின்றார். அவர்களுக்கு அதிகமாக படித்து தெரிந்து கொண்டும், சிந்தித்தும் பார்த்த பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதும் பொருள் தியாகத்தின் அமைப்பு தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அதற்குப் பிறகு அவர்கள் தொடர்ச்சியாக வக்ஃபே ஜதீத் மற்றும தஹ்ரீகே ஜதீத் சந்தாவை செலுத்த ஆரம்பித்து விட்டார்கள். பணியின் காரணமாக நாட்டிற்குள்ளும், நாட்டிற்கு வெளியேயும் அதிகமாக பயணம் மேற்கொள்கின்றார்கள். ஆனால் பயணத்தில் அவர்கள் இருந்தபோதிலும் தொடர்ச்சியாக அவர்கள் சந்தாவை செலுத்துகின்றார்கள்.

அத்வார் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஜனவரி 2020 ல் தமது பணியின் காரணமாக அவர்கள் ஆர்மீனியா செல்ல வேண்டியதிருந்தது. அங்கிருந்து காஸான் செல்ல இருநதது. இந்த பணி மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆனால் அவர்களிடம் பயணத்திற்கான தொகை போதுமான அளவில் இருக்கவில்லை. கஷ்டமும் இருந்தது. துஆவும் செய்து வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: டிசம்பர் 30 அன்று ஒரு கம்பெனியிலிருந்து அவர்களது வங்கிக் கணக்கில் ஒரு தொகை போடப்பட்டது. இந்த தொகை பிப்ரவரியில் போட வேண்டிய தொகையாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்கள் மட்டுமின்றி பலருக்கும் இந்த தொகை பிப்ரவரியில்தான் செலுத்தப்பட இருந்தது. ஆனால் இவர்களுக்கு மட்டும்தான் இந்த தொகை பிப்ரவரிக்கு பதிலாக டிசம்பரில் போடப்பட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது முழுக்க முழுக்க சந்தாவின் அருளினாலேயே ஆகும். மேலும இத்தனை மக்களுக்கு மத்தியில் எனக்கு மட்டும் டிசம்பர் 30 அன்று இந்த தொகை ஏன் போடப்பட்டது என்பது எனக்கு புரியவில்லை.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் நடைமுறை மற்றும் அன்பின் வெளிப்பாடு ஓர் அஹ்மதி முஸ்லிமிடமே காட்டப்படும். ஆக இவ்வாறும் அல்லாஹ் ஈமானை வலுப்படுத்துகின்றான்.

ஆயிவெரிகோஸ்டிலிருந்து சான் பேதுரு மண்டலத்தின் முபல்லிக் வகார் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இங்கு பேதுரு மண்டலத்தில் 2014 ஆம் ஆண்டு ஃபதாகரு ஊரில் 20 நபர்களைக் கொண்ட ஒரு சிறிய ஜமாஅத் நிறுவப்பட்டது. இங்கு ஜாரா சாஹிப் என்பவர் புர்கினோஃபாஸோவைச் சார்ந்தவர் ஒரு செயல் துடிப்புள்ள உறுப்பினர் ஆவார். அவர் ஒரு வருடத்திற்குப் பிறகு புர்கினோ ஃபாஸோ திரும்பிச் சென்று விட்டார். அவர் திரும்பிச் சென்றதும் மிகவும் கஷ்டமான நிலை இருந்தது. ஏனென்றால் மற்றவர்கள் அந்த அளவுக்கு செயல் துடிப்புள்ள மக்கள் கிடையாது. மேலும் அவர்களுக்கு தர்பிய்யத்திற்கான தேவையும் இருந்தது.

எவ்வாறிருப்பினும் அவர்களது மகனான ஈஸா ஜரா சாஹிப் அவர்கள் திருமணம் முடித்திருந்தார்கள். அவர்கள் விவயாசம் செய்து வந்தார்கள். அவர்களிடம் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர்களை குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய இஜ்திமாவில் செல்லுமாறு கவனமூட்டப்பட்டது. மேலும் அவர்களுக்கு சந்தாவின் முக்கியத்துவம் மற்றும் அருட்கள் தொடர்பாகவும், ஜமாஅத் அமைப்புடன் வலுவான தொடர்வை வைப்பது மற்றும் துஆ செய்து கொண்டிருப்பதன் பக்கமும் எடுத்துக் கூறப்பட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு டிசம்பரில் தேசிய ஜல்ஸா சாலானாவிற்கு முன்பாக என்னிடம் வந்தார்கள். மேலும் 10000 பிரான்க் ஷிஃபா தொகையை சந்தாவாக வழங்கினார்கள். எனவே நான் ஆச்சரியத்துடன் அவர்களிடம், இந்த தொகையை நீங்கள் எவ்வாறு செலுத்தினீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நான் சந்தா செலுத்த ஆரம்பித்ததும் அல்லாஹ்வின் அருட்கள் என்மீது பொழிந்து கொண்டிருக்கின்றன. எனக்கு மற்றவர்களின் வயலை விட அதிக லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே உலகை நேர்வழியின் பக்கம் அழைக்கின்றார்கள். இறைவனுக்கு நன்றி. எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இப்போது தொடர்ச்சியாக சந்தா செலுத்துவேன்.

அடுத்து இந்தியாவின் வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் அவர்கள் ஒரு 12 வயது குழந்தையைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது அந்த குழந்தை பல வருடங்களாக தொடர்ச்சியாக வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தி வருகின்றாள். ஒரு பையில் பணத்தை ஒன்று சேர்க்கின்றாள். அந்த குழந்தையால் பேசவும் முடியாது; கேட்கவும் முடியாது. மற்றவர்கள் சந்தா கொடுப்பதைப் பார்த்த அந்த சிறுமிக்கு எந்த தொகை அவளுக்கு கிடைத்தாலும் அதனை சந்தாவாக கொடுப்பதற்கான ஆர்வம் அவளிடம் ஏற்பட்டது.

லாயிபீரியாவின் ஒரு முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: கேப் மாவுண்ட் காவுண்டி ஒரு ஜமாஅத் ஆகும். அங்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகைக்குப் பிறகு நான் வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பாக எடுத்துக் கூறினேன். அப்போது உறுப்பினர்கள் ஒவ்வொருவராக தம் சார்பாகவும், தனது குடும்ப உறுப்பினர்களின் சார்பாகவும் சந்தா செலுத்த ஆரம்பித்தனர். அப்போது சுலைமான் மற்றும் அப்துல்லாஹ் என்ற இரண்டு சிறுவர்கள் பள்ளியிலிருந்து எழுந்து சென்று விட்டனர். பிறகு சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் திரும்பி வந்து 20,20 லாயிபீரியன் லாடரை சந்தாவாக செலுத்தினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பொதுவாக இங்கு பெற்றோர்கள் குழந்தைகளின் சந்தாவை செலுத்தி விடுகின்றனர். எனவே அந்த சிறுவர்களிடம், நீங்களே ஏன் சந்தாவை செலுத்தினீர்கள் என்று கேட்க எண்ணினேன். அதற்கு அந்த இரண்டு சிறுவர்களும், குழந்தைகளும் வக்ஃபே ஜதீதில் இணைய வேண்டும் என்பது காலத்தின் கலீஃபாவின் கட்டளையாகும் என்பது எங்களுக்கு தெரிய வந்தது. எனவே நாங்களும் கலீஃபத்துல் மஸீஹின் கூற்றிற்கேற்ப தொகையை ஒன்று சேர்த்து சந்தாவாக செலுத்த எண்ணினோம் என்று கூறினர்.

ஆக இப்போது தொலை தூரத்தில் இருக்கின்ற குழந்தைகளும் அவர்கள் காலத்தின் கலீஃபாவை பார்த்தது கூட கிடையாது. ஆனால் இந்த கலப்பற்றத்தன்மை மற்றும் தொடர்பை அல்லாஹ்வால்தான் அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்த முடியும். அல்லாஹ் இவர்களது கலப்பற்றத்தன்மை மற்றும் பற்றுணர்வை மேலும் அதிகப்படுத்துவானாக.

ஆக குழந்தைகளாக இருந்தாலும் சரி; பெரியவர்களாக இருந்தாலும் சரி; புதிய அஹ்மதிகளாக இருந்தாலும் சரி; அல்லது பழைய அஹ்மதிகளாக இருந்தாலும் சரி அவர்களுக்கு அல்லாஹ்வின் அன்பை பெறுவதற்கு அவனது வழியில் செலவு செய்ய வேண்டும் என்ற ஞானம் இருக்கிறது. மேலும் சிலருக்கு நான் கூறியதுபோன்று அல்லாஹ்வே வழிகாட்டுகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றின்படி அல்லாஹ்வின் வழியில் செலவு செய்த இவர்கள் பெருமிதம் கொள்ளத்தக்கவர்களாக இருக்கின்றனர்.

இப்போது நான் வக்ஃபே ஜதீத் தொடர்பாக கடந்த ஆண்டு செய்யப்பட்ட பொருள் தியாகத்தின் அறிக்கையை எடுத்துக் கூறுவேன். மேலும் புதிய வருடத்திற்கான அறிவிப்பையும் செய்வேன்.

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 62 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்தது. மேலும் 1 ஜனவரி யிலிருந்து புதிய வருடம் ஆரம்பமாகி விட்டது. இந்த வருடம் வக்ஃபே ஜதீதில் உலகலாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு 96 லட்சத்தி 43 ஆயிரம் பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட ஐந்து லட்சம் பவுண்ட் அதிகமாகும்.

வசூலின் அடிப்படையில் இந்த வருடம் பிரித்தானிய முதலிடத்தில் உள்ளது. அதன் விவரம் இவ்வாறாகும். முதலிடத்தில் பிரித்தானியா, அடுத்து பாகிஸ்தான், அடுத்து ஜெர்மனி, அடுத்து அமெரிக்கா, அடுத்து கனடா, அடுத்து இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, அடுத்து இரண்டு மத்திய கிழக்கு நாடுகள்.

அமீர் சாஹிப் அவர்கள், வக்ஃபே ஜதீதில் முன்னேறி விடுவோம் என்று கூறினார்கள். அவர்கள் தமது கூற்றை முழுமை செய்து விட்டார்கள்.

உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் கடந்த ஆண்டை விட அதிகமாக செலுத்திய பத்து பெரிய ஜமாஅத்துகள் இவ்வாறாகும். இந்தோனேஷியா, ஜெர்மனி, அமெரிக்கா போன்றவை. இவைகள் மூன்று பெரிய ஜமாஅத்துகள் ஆகும். இந்தியாவும் தனது சந்தாவை அதிகரிக்கும்படி செய்துள்ளது. பிறகு கனடா, பிரித்தானியா, மத்திய கிழக்கு நாடுகள், பாகிஸ்தான். மேலும் ஆஸ்திரேலியாயை விட இந்தியா உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் மிகவும் அதிகமாக முன்னேறியுள்ளது. இந்த அடிப்படையில் ஐந்தாவது இடத்தில் இந்தியா உள்ளது.

ஆப்ரிக்காவில் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் ஜமாஅத்துகளின் விவகரங்கள் இவ்வாறாகும். முதலிடத்தில், கானா, இரண்டாவது நய்ஜீரியா, பர்கினோஃபாஸோ, தன்ஸானிய்யா, பெனின், கேம்பியா, கென்யா, மாலி, சிராலியோன், கான்கோ கன்ஸாஷா ஆகியவை.

கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கைளில் அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தாவில் 18 லட்சத்தி 21 ஆயிரம் நபர்கள் ஆவர். அவர்களில் இவ்வருடம் 89000 நபர்கள் அதிகமாக இணைந்துள்ளனர்.

கலந்து கொண்டவர்களில் இந்த வருடம் முன்னிலை பெற்ற ஜமாஅத்துகளில் முதலில் கேமரூன், செனிகால், நய்ஜீரியா, புர்கினோஃபாஸோ, இந்தோனேஷியா பிறகு இதர ஜமாஅத்துகள் அடங்கும்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரித்தானியாவின் முதல் பத்து பெரிய ஜமாஅத்துகள் இவையாகும். முதலிடத்தில் இஸ்லாமாபாத், ஒல்டர்ஷா, வெஸ்டன் பார்க், பெர்மின்ஹம் சாவுத், மஸ்ஜிது பஸல், பட்னு, ஜெலன்கம், நியூ மோல்டன், பெர்மின்கம் வெஸ்ட், ஹோன்ஸ்லோ நார்த்.

மண்டலத்தின் அடிப்படையில் முதல் ஐந்து மண்டலம், பைத்துல் புதூஹ் முதலிடத்தில் உள்ளது. பிறகு மஸ்ஜிது ஃபஸல் ரீஜன், மிட்லாண்ட் ரீஜன், இஸ்லாமாபாத் ரீஜன், பைத்துல் இஹ்ஸான் ரீஜன் போன்றவை.

அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள்: முதலிடத்தில் ஒல்டர் ஷா, ரோஹிம்ப்டன், பட்னி, இஸ்லாமாபாத், பிசம் பார்க், சீம், வஸ்டர்பார்க், ரேன்ஸ் பார்க் பிறகு சர்பட்டன் போன்றவை.

பாகிஸ்தானில் சந்தா செலுத்துபவர்களில் முதல் மூன்று இடத்தைப் பெற்ற ஜமாஅத்துகள்: முதலிடத்தில் லாஹூர், பிறகு ரப்வா, பிறகு கராச்சி ஆகும்.

பாகிஸ்தானில் கரன்ஸியின் மதிப்பு பின்னால் சென்று விட்டது. கடந்த ஆண்டைப் போன்று கரன்ஸி இருந்திருந்தால் பிறகு பாகிஸ்தான் முதலிடத்தில் இருந்திருக்கும். ஆக இது பிரித்தானியாவின் மிகப்பெரிய சிறப்பு ஒன்றுமல்ல.

பாகிஸ்தானில் மாவட்ட ரீதியாக முதலிடத்தில் இஸ்லாமாபாத் ஆகும். அடுத்து சியால்கோட், ராவல்பிண்டி, குஜ்ரான்வாலா, முல்தான், உமர் கோட், ஹைதராபாத், ஆபாத் டேரா, காஸி கான், மீர்பூர் காஸ், பிஷாவர்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் பெரிய பத்து ஜமாஅத்துகள்: இஸ்லாமாபாத், ஷஹர் டாவுன் ஷிப், லாஹுர், டிஃபென்ஸ் லாஹூர், தாருஸ் ஸிக்ர் லாஹூர், குல்ஷனே இக்பால் கராச்சி, சமன் ஆபாத் லாஹூர், ராவல்பிண்டி ஷஹர் அஸீஸ் ஆபாத் கராச்சி, குல்ஷனே ஜாமி கராச்சி, தில்லி கேட் லாஹூர்.

அங்கு எல்லா ரீதியிலும் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இருப்பினும் அல்லாஹ்வின் அருளால் அங்கும் பெரும் தியாகங்கள் செய்யக்கூடிய மக்களாக அவர்கள் இருக்கின்றனர்.

அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில் பாகிஸ்தானில் மூன்று பெரிய ஜமாஅத்துகள் இவையாகும்: முதலில் லாஹூர், இரண்டு கராச்சி, மூன்று ரப்வா.

மாவட்ட அளவில், சியால்கோட் முதலிடத்திலும், அடுத்து குஜ்ரான்வாலா, சர்கோதா, ஹைதராபாத், டேராகாஸி, கான்பூர் ஷேகூபூரா, மீர்பூர் ஹாஸ், உமர் கோட், அவ்காடா, பிஷாவர்.

வசூலின் அடிப்படையில் ஜெர்மனியின் ஐந்து உள்ளூர் அமாரத்துகளைக் கொண்ட ஜமாஅத்துகள்: ஹேம்பர்க், பிரான்க்பர்ட், டிட்சன் பாக், சார் கரோஸ், வஸ்பாதன்.

அத்ஃபால் பதிவேட்டின் முதல் ஐந்து மண்டலம் இவ்வாறாகும்: ஹேஸன் ஸேதா வெஸ்ட், ஹேஸன் சாவுத் ஈஸ்ட், ஹேஸன் டாவுண்ஸ் சாவுத் மற்றும் ராயின் லாயின் ஃபால்ஸ் எவ்வாறிருப்பினும் இதன் பெயர் எதுவாக இருப்பினும் ஜெர்மனியே அதனை சரிசெய்து கொள்ளட்டும்.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 06 February 2020 Issue No. 6

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: மேரி லேண்ட், சிலிகோன் வேலி, லாஸ் ஏன்ஞ்லஸ், ஹோஸ்டன், சென்ட்ரல் வர்ஜீனியா, சீட்டல், டெட்ராயிட், சவுத் வெர்ஜீனியா, ஷிகாகோ, நார்த் வெர்ஜீனியா.

வசூலின் அடிப்படையில் கனடாவின் அமாரத் ஜமாஅத்துகள்: வான் முதலிடத்திலும், கேல்கரி, பீஸ் வில்லேஜ், வேன்கோவர், சார்மஸி சாகா போன்றவை.

பெரிய ஜமாஅத்துகள்: டர்ஹம் பிரேட் ஃபோர்ட் ஹேட்மின்டன் வெஸ்ட், மில்டன் ஈஸ்ட், ஹம்மில்டன் மாவுண்டன், ஆடோ ஈஸ்ட், மற்றும் ஆடோ வெஸ்ட், ஏறி டராயி, வேனி பேக் மற்றும் ஏட்பில்ட்.

அத்ஃபால் பதிவேட்டின் முதல் ஐந்து ஜமாஅத்துகள்: வாகன் வான், கேல்கரி, பீஸ் வில்லேஜ், வெஸ்டர்ன் பெர்ஹம்டன் வெஸ்ட் போன்றவை.

அத்ஃபால் பதிவேட்டின் முதல் ஐந்து ஜமாஅத்துகள்: டர்ஹம் பிரோட், ஃபோர்ட் மில்டன் ஈஸ்ட், ஹமில்டன், மாவுண்டன்.

இந்தியாவின் மாநிலங்களில் முதலிடத்தில் கேரளா, இரண்டாவது காஷ்மீர் அங்கு நிலைமை மிகவும் மோசமாக இருந்தபோதிலும் இரண்டாவது இடத்தில் உள்ளது., மூன்றாவது கர்நாடகா, அடுத்து தமிழ்நாடு, தெலுங்கானா, ஒடிசா, பஞ்சாப், வெஸ்ட் பெங்கால், தில்லி பிறகு உத்தர பிரதேசம்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் இந்திவாயின் ஜமாஅத்துகள் இவ்வாறாகும்: பத்தபிரியம், காதியான், ஹைதராபாத், கோழிக்கோடு, பெங்களூர், கோயம்பத்தூர், கொல்கத்தா, கருலாயி, கேரங் மற்றும் பயங்காடி.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகள்: மெல்பர்ன் லான்ங், காஸல் ஹில், மெல்பர்ன் பேரிக், மாஸ்டன் பார்க், எட்லைட் சவுத், எம்டி டூருயிட், பேன்ரித், பிளேக் டவுண், கேன்பரா, பர்த்.

அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில் ஆஸ்திரேலியாவில், மெல்பர்ன் லான்ங் வார்ன், எட்லைட் சவுத், மெல்பர்ன் பேரிக், எம்டி டூருயிட், பேன்ரித், லோகன் ஈஸ்ட், பர்த், மாஸ்டன் பார்க், காஸல் ஹில் பிறகு லோகன் வெஸ்ட்.

இங்கும் இன்று நெருப்பு அழிவை ஏற்படுத்தியுள்ளது. அல்லாஹ் இந்த மக்களின் மீதும் கருணை காட்டுவானாக. இந்த மக்கள் உண்மையில் தன்னைப் படைத்தவனை அடையாளங்கண்டு கொள்பவர்களாக திகழ்வார்களாக. எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் அங்கு அல்லாஹ்வின் அருளால் தியாகங்கள் செய்கின்றனர். அல்லாஹ் தியாகம் செய்த அனைவரின் செல்வத்திலும், உயிரும் எண்ணற்ற பரக்கத்தை ஏற்படுத்துவானாக.

நான் கூறியதுபோன்று பாகிஸ்தானின் பொருளாதார நிலை மோசமாகிக் கொண்டே செல்கின்றது. இதன் காரணமாக கரன்ஸிக்கு எந்த மதிப்பும் இல்லை. இதன் காரணமாக இவர்களது பொஷிஸனும் முன்னால் சென்று விட்டது. இருப்பினும் தியாகம் செய்வதில் அவர்கள் எந்த குறையும் செய்வதில்லை. அதேபோன்று அரசியல் நிலைமைகளும் அங்கு மோசமாக உள்ளது. அதன் தாக்கம் பொருளாதார நிலைமையிலும் ஏற்படுகிறது. பிறகு இந்த மண்டலத்தில் இந்தியா பாகிஸ்தான் ஆகியவற்றிற்கிடையே பிரச்சனையும் அதிகரித்து வருகின்றது. இந்தியாவின் உட்புற நிலைமையும் மகவும் மோசமாக உள்ளது. மேலும் உலகத்தின் பொதுவான நிலையைப் பார்க்கும்போது, அது தனது அழிவை அழைப்பதைப் போன்றே தோன்றுகிறது. மத்திய கிழக்கு நாடுகளின் நிலைமைகளும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. ஈரான், அமெரிக்கா, இஸ்ராயீல் போன்ற நாடுகளுக்கிடையே போருக்கான அபாயமும் அதிகரித்து வருகின்றது. முஸ்லிம் நாடுகளுக்கிடையே ஒன்றுமை இல்லை. ஆக உலகின் அழிவிலிருந்து பாதுகாப்பாக இருக்கவும், இறைவன் பக்கம் வரவும் நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் தனது அருளை பொழிவானாக. மேலும் இவர்களுக்கு அறிவைவும், புரியும் திறனையும் வழங்குவானாக.

புதிய வருடம் ஆரம்பமாகியுள்ளது. நாம் ஒருவர் மற்றொருவருக்கு வாழ்த்துக்களை கூறுகின்றோம். ஆனால் இருளோ இன்னும் ஆழமாக சென்று கொண்டிருக்கிறது. ஆக இந்த வருடம் அருளுக்குரியதாக அமை நாம் அல்லாஹ்விடம் இந்த துஆவை செய்வது அவசியமாகும். அதாவது அல்லாஹ் இந்த வருடத்தை இவ்வாறு அருளுக்குரியதாக ஆக்குவானாக. அதாவது உலக அரசாங்கங்கள் தனது மேன்மையை நிரூபிப்பதற்கு உலகை அழிவின் பக்கம் கொண்டு செல்லாமல் இருப்பார்களாக. மாறாக, உலகத்தில் அமைதியையும், நீதியையும் நிலைநாட்டக் கூடியவர்களாக திகழ்வார்களாக. தனது தனிப்பட்ட ஆணவத்தில் வீழ்ந்து தனது நாட்டின் பயனுக்காக மனித இனத்தை அழிக்கக் கூடியவர்களாக ஆகாமல் இருப்பார்களாக. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக. முஸ்லிம் நாடுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியுடன் இணைந்து பெருமானார் (ஸல்) அவர்களின் கொடியை உலகத்தில் பரக்கச் செய்வதற்கு உதவியாளர்களாக திகழ்வார்களாக. ஏகத்துவத்தை உலகத்தில் நிலைநாட்டக் கூடியவர்களாக திகழ்வார்களாக. அதுவன்றி இந்த மக்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை எதிர்ப்பதில் முன்னேறக் கூடியவர்களாக திகழாமல் இருப்பார்களாக. இப்போது அவர்கள் உச்ச நிலையை எட்டிவிட்டனர்.

அல்லாஹ் நமக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. நாம் முன்பைவிட அதிகமாக காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதன் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக திகழ்வோமாக. இந்த உரிமையை செலுத்தியவாறு உலகத்தில் ஏகத்துவத்தின் கொடியை நாட்டக்கூடியவர்களாக திகழ்வோமாக. மேலும் உலகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வரக்கூடியவர்களாக திகழ்வோமாக. மேலும் இதற்காக தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தக்கூடியவர்களாக திகழ்வோமாக.

நாம் இந்த எண்ணத்தை கொண்டிருக்கவில்லை என்றால், மேலும் இந்த எண்ணத்தோடு துஆக்கள் செய்யவில்லை என்றால், மேலும் நமது துஆக்களுடன் புதிய வருடத்தில் நுழையவில்லை என்றால் பிறகு நமது புதிய வருடத்திற்கான வாழ்த்துக்களை கூறுவது வீணானதாகும். அதனால் எந்த பயனும் கிடையாது.

ஆக புதிய வருடத்திற்காக உண்மையான வாழ்த்துக்களை கூறுவது நம்மீது பொறுப்புகளை சுமத்துககின்றது. இதற்காக ஒவ்வொரு அஹ்மதிக்கும், பெரியவருக்கும், சிறியவருக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும் உணர்வு ஏற்பட வேண்டும். மேலும் இதற்காக தனது முழு முயற்சியையும், ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். மேலும் தமது துஆக்களிலும், இறைவனோடுள்ள தொடர்பிலும் ஒரு குறிப்பான நிலையை ஏற்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் இந்த புதிய ஆண்டின் உண்மையான அருளை பெறக் கூடியவர்களாக திகழ்வோம். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad